பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 287

புதன்கிழமை
10 செப்ரெம்பர் 2025

ஆவணி 25 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

## கலட்டியில் வாள்வெட்டு; ஒருவருக்குப் படுகாயம்!

யாழ்ப்பாணம், செப். 10
யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கலட்டிச் சந்திப் பகுதியில், நேற்றுக் காலை இடம் 15

# முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமை இன்று நீக்கம்!

**கொழும்பு, செப்ரெம்பர் 10**

**முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் சிறப்புரிமைகள் தொடர்பான சட்டவரைவின் மீதான விவாதமும் வாக்கெடுப்பும் இன்று இடம்பெறவுள்ள நிலையில், அந்தச் சிறப்புரிமைகள் இன்றுடன் நீக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.** 15

## உள்நாட்டுப் பொறிமுறையை ஏற்கவில்லை தமிழர்கள்!

### கோடீஸ்வரன் எம்.பி. பதிலடி



கொழும்பு, செப். 10
உள்நாட்டுப் பொறிமுறையை பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் முற்றாக நிராகரிக்கின்றனர். எனவே, வெளிநாட்டு பொறிமுறையை அரசாங்கம் ஏற்க வேண்டும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரன் வலியுறுத்தினார். 15

## உள்ளகப் பொறிமுறையில் எந்த மாற்றமும் இல்லை!

### அமைச்சர் நளிந்த திட்டவட்டம்



கொழும்பு, செப். 10
இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பில், உள்ளகப் பொறிமுறை ஊடாகவே பொறுப்புக்கூறல் நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவையின் முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் மாநாட்டில், அமைச் 15

## ஈ.பி.டி.பி.யின் படுகொலைகளுக்கு சாட்சியம் சொல்வதற்குத் தயார்!

### முன்னாள் உறுப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 10
தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் அற்புதன், சட்டத்தரணி மகேஸ்வரி, ரூபவாஹினி கூட்டுத்தாபன பணியாளர் கே.எஸ்.ராஜா உள்ளிட்ட பலரை ஈ.பி.டி.பி.யினரே படுகொலை செய்தனர். இந்தப் படுகொலைகள் தொடர்பில் சாட்சியம் சொல்வதற்குத் தயார் என்று ஈ.பி.டி.பி. கட்சியின் முன்னாள் உறுப்பினர் சதா என அழைக்கப்படும் சுப்பையா பொன்னையா தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று 15

## புதிய அரசியலமைப்பில் நிறைவேற்று அதிகாரம் நீக்கம்

கொழும்பு, செப். 10
புதிய அரசியலமைப்பை இயற்றுவதற்குரிய பணிகள் இடம்பெறும்போதே, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலா 15

## ஹெரோய்ன் வைத்திருந்த நான்கு இளைஞர்கள் கைது



யாழ்ப்பாணம், செப். 10
யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் ஹெரோய்ன் மற்றும் ஐஸ் போதைப் பொருள்களை உடமையில் வைத்திருந்த நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸா 15

# மனித உரிமை விவகாரம் அரசியல் ஆயுதம் அல்ல!

### அழுத்தங்களை அனுமதிக்கமாட்டோம்
### அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவிப்பு



கொழும்பு, செப். 10
ஒரு நாட்டுக்கு அழுத்தம் வழங்குவதற்காக மனித உரிமைகள் விவகாரத்தைப் பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. அந்தப் பேரவையின் நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல்கள் 15

### முச்சந்தி முரளி

‘உள்ளுக்க
ஒண்டுமேயில்லாத
ஒண்டைத்தான் உவை
உள்ளகப்பொறிமுறை
எண்டு ஏமாத்துகினம்
கண்டியளோ’



ஊழல் அரசுக்கு எதிராக

## நேபாளத்தில் கிளர்ச்சி கவிழ்ந்தது ஆட்சி!

### நாடாளுமன்றம் தீக்கிரை அமைச்சர்கள் மீது தாக்குதல்

காத்மண்டு, செப். 10
நேபாள அரசாங்கத்தின் ஊழல் மோசடிகளுக்கு எதிராக இளைஞர்கள் மேற்கொண்டு வந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் கலவரமாக மாறியதைத் 08

### ஒரு நாய்க்கு 600 ரூபா வீதம்

## கட்டாக்காலி பெண் நாய்களை பிடித்துத் தந்தால் சன்மானம்!

### நல்லூர் பிரதேசசபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 10
நல்லூர் பிரதேசசபையின், பெண் நாய்களுக்கான இலவசக் கருத்தடைச் சிகிச்சை முகாமுக்கு, சமூக நலன் நோக்கில் பெண் கட்டாக்காலி நாய்களைப் பிடித்துத் தருபவர்களுக்கு ஒரு நாய்க்கு 600 ரூபா வீதம் சன்மானமாக வழங்கப்படுமென நல்லூர் பிரதேசசபை அறிவித்துள்ளது.

நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் 15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத | சுப தவசக் |
|---|---|---|---|---|---|---|---|
| திகதி 09.09.2025 | திகதி 09.09.2025 | திகதி 09.09.2025 | திகதி 09.09.2025 | திகதி 09.09.2025 | திகதி 09.09.2025 | திகதி 09.09.2025 | திகதி 09.09.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4189 | சீட்டிழுப்பு இலக்கம் 1256 | சீட்டிழுப்பு இலக்கம் 0215 | சீட்டிழுப்பு இலக்கம் 2295 | சீட்டிழுப்பு இலக்கம் 5947 | சீட்டிழுப்பு இலக்கம் 1977 | சீட்டிழுப்பு இலக்கம் 0522 | சீட்டிழுப்பு இலக்கம் 0063 |
| ஆங்கில எழுத்து N | வெற்றி இலக்கினம் மீனம் | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து E | ஆங்கில எழுத்து H | ஆங்கில எழுத்து P | ஆங்கில எழுத்து H | வெற்றி இலக்கினம் தனுசு |
| | | | சுப்பர் இலக்கம் 11 | | | | |
| வெற்றி இலக்கங்கள் 16 34 62 65 | வெற்றி இலக்கங்கள் 03 24 47 50 | வெற்றி இலக்கங்கள் 1 0 3 1 | வெற்றி இலக்கங்கள் 25 55 62 64 | வெற்றி இலக்கங்கள் 2 0 5 3 1 5 | வெற்றி இலக்கங்கள் 01 19 22 23 | வெற்றி இலக்கங்கள் 5 3 1 5 | வெற்றி இலக்கங்கள் 03 21 26 43 |
| விசேட எழுத்து N | | | | | விசேட எழுத்து P | | |

# பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கி தனிநபர் பாதுகாப்பை உறுதிசெய்க!

## உறுப்பு நாடுகள் ஐ.நா.வில் வலியுறுத்து

**கொழும்பு,செப்.10**

**இலங்கையில் தனிநபர்களை இலக்குவைப்பதற்குப் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்று பிரிட்டன், நியூஸிலாந்து, சுவிட்ஸர்லாந்து, அவுஸ்திரேலியா உள்ளிட்ட உறுப்பு நாடுகள் வலியுறுத்தியுள்ளன.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் ஜெனீவாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. இதில் இலங்கை தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. தொடர்ந்து அறிக்கைமீதான விவாதம் நடைபெற்றது.

இதன்போது, தேசிய நல்லிணக்கத்தையும், பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதிப்படுத்துவதற்கான உள்ளகக் கட்டமைப்புகளின் இயலுமையையும் கட்டியெழுப்புவதில் இலங்கை அரசாங்கம் கொண்டிருக்கும் அர்ப்பணிப்புடன்கூடிய கடப்பாட்டைப் பெரிதும் வரவேற்கின்றோம்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் முன்னெடுக்கப்பட்டுவரும் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திச் செயற்றிட்டங்களையும் பாராட்டுகின்றோம். இலங்கையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கு அவசியமான ஒத்துழைப்புகளை வழங்குவதற்கு நாம் தயார் என்று ஜப்பான் தெரிவித்தது.

நாட்டின் மனித உரிமைகள் நிலைவரத்தை மேம்படுத்துவதில் அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டைப் பாராட்டுகின்றோம். மனிதப்புதைகுழி அகழ்வு நடவடிக்கைகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவாக முன்னெடுக்கப்படவேண்டியது அவசியம். சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் சிறுபான்மையின மக்களை இலக்குவைத்து ஒடுக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றன.

பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கப்படும் என்று வாக்குறுதியளிக்கப்பட்டபோதிலும், இன்னமும் அந்தச் சட்டம் நீக்கப்படாமை அதிருப்தி தருகின்றது என்று பிரிட்டன் தெரிவித்தது.

மனித உரிமைகளை மேம்படுத்துவதற்கும், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கும், நிலைமாறுகால நீதியை உறுதிசெய்வதற்கும் இலங்கையால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்கத் தயார். நபர்களைத் தன்னிச்சையாகக் கைதுசெய்வதற்கும், தடுத்துவைப்பதற்கும் பயன்படுத்தப்படும் பயங்கரவாதத்தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும்.

நிகழ்நிலைக்காப்புச்சட்டம் திருத்தியமைக்கப்படவேண்டும் என்று அவுஸ்திரேலியா தெரிவித்தது.

நியூஸிலாந்து, சுவிட்ஸர்லாந்து மற்றும் மொன்டெனேக்ரோ ஆகிய நாடுகள் இலங்கையில் உண்மை, நீதி மற்றும் பொறுப்புக்கூறல் என்பன உறுதிப்படுத்தப்படவேண்டியது அவசியம் எனவும், சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்படவேண்டும் எனவும் வலியுறுத்தின. (ச-இ)

### சுபிரி தன சம்பத

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 09.09.2025 | செவ்வாய்க்கிழமை | T | 1 2 0 6 0 2 | 0655 |

### Super Ball

| திகதி | தினம் | சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|---|
| 09.09.2025 | செவ்வாய்க்கிழமை | 2921 | R | 08 40 44 53 |

### சனிதா

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 09.09.2025 | செவ்வாய்க்கிழமை | P | 16 48 49 52 | 5082 |

### SASIRI

| திகதி | தினம் | வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
|---|---|---|---|
| 09.09.2025 | செவ்வாய்க்கிழமை | 0766 | 17 28 40 |

### லக்ன ராசி

| திகதி | தினம் | கன்னி | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
|---|---|---|---|---|
| 09.09.2025 | ஞாயிற்றுக்கிழமை | | 03 11 16 23 | 4633 |

### KAPRUKA

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|---|
| 09.09.2025 | செவ்வாய்க்கிழமை | Q | 11 | 47 53 70 75 | 2097 |

### அத கோடிபதி

| திகதி | தினம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
|---|---|---|---|---|
| 09.09.2025 | செவ்வாய்க்கிழமை | N | 27 54 58 67 | 2747 |

# கொள்வனவுச் சிக்கலாலேயே மருந்துகளுக்குத் தட்டுப்பாடு

## *சுகாதார அமைச்சர் தெரிவிப்பு*

கொழும்பு,செப்.10

மருத்துவமனைகளில் மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவது, நிதிப்பற்றாக்குறையால் அல்ல, மாறாக அவற்றைக் கொள்வனவு செய்வதில் ஏற்படும் செயன்முறைச் சிக்கலே காரணம் என்று சுகாதார மற்றும் ஊடக அமைச்சர் மருத்துவர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

பல் சத்திரசிகிச்சை மருத்துவர்களுக்கான வரையறுக்கப்பட்ட வழிமுறைப்பயிற்சிக்காக, சுகாதார அமைச்சால் 86 பேர் புதிதாக இணைத்துக்கொள்ளப்பட்டுள்ளனர். இவர்களுக்கான நியமனக் கடிதங்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன. நிகழ்வில் உரையாற்றும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்த ஒவ்வொரு துறையையும் அறிவியல் ரீதியாகவும், முறையாகவும் நிர்வகிக்க அவசியமான திட்டங்கள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன. 2019ஆம் ஆண்டு முதல் பல் சத்திரசிகிச்சைப் பட்டதாரிகள் பலர் வரையறுக்கப்பட்ட வழிமுறைப்பயிற்சிக்காக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ளனர்.

சுகாதார சேவைக்கான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்விதத் தாமதமும் இன்றி வழங்கப்படும் - என்றார். (ச-இ)

நடப்பாண்டில்

# வீதி விபத்து

## உயிரிழப்பு 1,800+



கொழும்பு, செப்.10

இந்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் நடந்த ஆயிரத்து 757 வீதி விபத்துகளில் ஆயிரத்து 870 பேர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தப் புள்ளிவிவரத்தை போக்குவரத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் தலைவர் இந்திக்க ஹபுகொட வெளியிட்டுள்ளார்.

வீதி விபத்துகளால் நாளாந்தம் சுமார் ஏழு முதல் எட்டுப் பேர் வரை உயிரிழக்கின்றனர். எனவே, சாரதிகள், மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள், பாதசாரிகள் மற்றும் பயணிகள் உள்ளிட்ட அனைத்து வீதி பயனர்களும் போக்குவரத்துச் சட்டங்களைக் கண்டிப்பாகப் பின்பற்றவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)

# எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயலாற்ற ஐ.தே.க. தீர்மானம்



கொழும்பு, செப்.10

எதிர்க்கட்சிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடல்களில் இணக்கம் ஏற்படுத்தப்பட்ட விடயங்களைத் தொடர்ந்து செயற்படுத்துவற்கு ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது என்று அந்தக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

ஆரம்பகட்டக் கலந்துரையாடல்களில் எட்டப்பட்ட இணக்கப்பாடுகளின் அடிப்படையில் ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சியில் உள்ள ஏனைய அரசியற் கட்சிகளுடன் தொடர்ச்சியாக கலந்துரையாடல்களை முன்னெடுத்துச் செல்ல ஐக்கிய தேசியக் கட்சி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சியில் உள்ள கட்சிகளுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல குழுவொன்று அல்லது அதற்குச் சமமான பொறிமுறை ஒன்று தேவை என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் கருத்தாகும்.

நாட்டின் தற்போதைய நிலையில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய காலம் வந்துள்ளது. அதனால் அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும். அதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துவருகின்றோம் - என்றார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோமரத்னவின் மனைவியின் கடிதம் தொடர்பில் அவதானம்

## நீதியமைச்சு தெரிவிப்பு

கொழும்பு, செப்.10

**கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்சவின் மனைவி கடந்த ஜூலை மாதம் அனுப்பிய கடிதம் கிடைத்துள்ளது. அந்தக் கடிதம் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது என்று நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பிரத்தியேகச் செயலாளர் தெரிவித்துள்ளார்.**

கடந்த ஜூலை மாதம் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் ஹரிணி அமரசூரிய, நீதியமைச்சர் ஹர்சன நாணயக்கார ஆகியோருக்கு சோமரத்ன ராஜபக்சவின் மனைவி கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

அந்தக் கடிதத்துக்குப் பதில் கிடைக்காததால் சோமரத்ன ராஜபக்ச தனது மனைவி ஊடாகக் கடந்த வாரம் மீண்டும் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

செம்மணி மனிதப்படுகொலை தொடர்பில் இதுவரையில் வெளிப்படுத்தாத விடயங்களை சகல ஊடகங்களுக்கும், சர்வதேச சமூகத்துக்கும், நீதித்துறைக்கும் வெளிப்படுத்தத் தயார் என்று அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், "மரணதண்டனை விதிக்கப்பட்ட இராணுவத்தினர் ஜனாதிபதியிடம் முன்வைக்கும் மேன்முறையீடு எனும் தலைப்பின்கீழ் நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவுக்கு அனுப்பப்பட்ட 10.07.2025 எனும் திகதியிடப்பட்ட கடிதம் கிடைத்துள்ளது.

அந்தக் கடிதம் அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதை அறியத்தருகிறோம்' என அமைச்சர் ஹர்ஷன நாணயக்காரவின் பிரத்தியேக செயலாளர் லஹிரு சமரசிங்கவால் அனுப்பப்பட்ட பதில் கடிதம் சோமரத்ன ராஜபக்சவின் மனைவி எஸ். சி.விஜேவிக்ரமவுக்குக் கடந்த வெள்ளிக்கிழமை கிடைத்துள்ளது. (எ-இ)

## நடப்பாண்டில், 1.6 மில்லியன் சுற்றுலாவிகள்

கொழும்பு, செப்.10

2025ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 1.6 மில்லியனை கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் மாத்திரம் 37 ஆயிரத்து 495 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

அதேவேளை 2025ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகைதந்த சுற்றுலாப் பயணிகளில் 33 இலட்சத்து 5 ஆயிரத்து 766 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு மீள்பரிசீலனைக்குக் காலக்கெடு

கொழும்பு, செப்.10

2025 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகள் கடந்த வாரம் வெளியான நிலையில், விடைத்தாள்களை மீள்பரிசீலனை செய்வதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 22ஆம் திகதி வரை ஏற்றுக்கொள்ளப்படும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்தி பயிலும் பாடசாலையின் அதிபரினால், பாடசாலைக்கு வழங்கப்பட்ட பயனர் பெயர் மற்றும் கடவுச்சொல்லைப் பயன்படுத்தி HTTPS://ONLINEEXAMS.GOV.LK/EIC/INDEX.PHP/CLOGIN/ என்ற இணையத்தளத்தில் ஸ்கூல் லொஜின் (SCHOOL LOGIN) இல் உள்நுழைந்து மீள்பரிசீலனைக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க முடியும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார். (ச-25)



## ராஜிதவுக்கு பிணை

கொழும்பு, செப்.10

ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பில் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

புதுக்கடை நீதவான் நீதிமன்றத்தில் அவரை நேற்று முன்னிலைப்படுத்தப்பட்டதையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, சந்தேகநபர் 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா 2 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளிலும் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

## குற்றவாளி சோமரத்னவிடம் மீண்டும் தகவல் திரட்டுவதா?

### ஓ.எம்.பி. அலுவலகம் ஆராய்வு

கொழும்பு.செப்.10

இலங்கை இராணுவத்தால் கூட்டு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட மாணவி கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள லான்ஸ் கோப்ரல் சோமரத்ன ராஜபக்சவை மீண்டும் சந்தித்து தகவல் திரட்டும் தேவைப்பாடு உள்ளதா என்பது குறித்து ஆராயப்படும் என்று காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்த தெரிவித்துள்ளார்.

காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் பிரதிநிதிகள் சிறைச்சாலைக்குச் சென்று அவரைச் சந்தித்து, அவரிடம் விடயங்களைக் கேட்டறிந்திருந்தனர். இந்தச் சந்திப்பில் காணாமற்போனோர் பற்றிய அலுவலகத்தின் தவிசாளர் மகேஷ் கட்டுலந்த மற்றும் நிறைவேற்று அதிகாரி ஜெகநாதன் தற்பரன் ஆகியோர் பங்கேற்றிருக்கவில்லை. இந்தநிலையிலேயே எமது அதிகாரிகளால், திரட்டப்பட்ட தகவல்கள் போதுமானவையா என்பது தொடர்பில், அலுவலகத்தின் நிர்வாகசபைக் கூட்டத்தில் ஆராயப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார். (ச-இ)




## நாங்கள் தான் காப்பாத்தோணும்

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்தகுடி எண்டு சும்மா வாயால வடைசுடத்தான் எங்களுக்குத் தெரியுமேதவிர, அப்பிடி மூத்தகுடி எண்டதுக்கான ஆதாரங்களையோ, சாட்சிகளையோ ஒழுங்கா வைச்சிருக்கிற வழக்கமே இல்லை. அதாலதான் இடையில வந்தவங்கள் தாங்கள்தான் இந்த நாட்டுக்குச் சொந்தக்காரர் எண்டு சொல்ல, நாங்கள் தலை குனிஞ்சு நிக்கிறம். இதிலதான் எங்களுக்கும் அவங்களுக்கும் வித்தியாசமிருக்கு. அவங்கள் தாங்கள்தான் இஞ்சத்த பூர்விகக்குடியள் எண்டு ஆதாரங்களை வலிஞ்சு உருவாக்கியோ, இல்லாட்டி எங்கட சாட்சியங்களைத் தங்கட எண்டு மடை மாத்தியோ நம்பவைக்கிறாங்கள். ஆனால் நாங்கள் என்ன செய்யிறம் இருக்கிற பொக்கிசங்களையும், குப்பை எண்டு நினைச்சு அழிக்கிறம்.

இப்பிடித்தான் போனகிழமை சாவகச்சேரியில, ஒரு காணியைத் துப்புரவாக்கேக்க இடைஞ்சலாக் கிடக்கு எண்டு சுமைதாங்கி ஒண்டை உடைச்சுப் போட்டினம். உண்மையில ஒரு கட்டடம் நூறு வருசப் பழசெண்டால் அது 'ஓட்டமெட்டிக்கா' தொல்பொருள் சின்னமா மாறிடும். பிறகு அதைத் தொல்லியல் சின்னமாப் பாதுகாக்கவேணும். அந்தச் சின்னத்துக்கு ஏதும் கெடுதியெண்டால், அப்பிடி அதுக்கு ஊறு செய்தவைக்குத் தண்டனை குடுக்கோணும் எண்டெல்லாம் சட்டம் இருக்கு. இஞ்ச உள்ள கோயில் குளங்களில எங்க விகாரை கட்டலாம் எண்டு வலிஞ்சு தேடி, வம்பை விலைக்கு வாங்கிற தொல்லியல் திணைக்களம் இப்பிடிக் கண்ணுக்கு முன்னால இருக்கிற தொல்லியல் சின்னங்களை அழிக்கிறதைக் கண்டுகொள்ளுறேலை. சுமை தாங்கி எண்டது எங்கட தமிழ்ப்பண்பாட்டில மட்டும் இருந்த ஒரு அடையாளம். றோட்டால போய் வாறவை தங்கட பொருள்களை இறக்கிவைச்சு, களைப்புத் தீருறதுக்காக முக்கியமான சந்தியள், பாதையளில சுமைதாங்கியைக் கட்டிவைச்சிருப்பினம். இப்பிடி ஒரு கட்டட அமைப்பு வேற எந்த இனத்துக்கும் இல்லை. அப்பிடி எங்களுக்கு மட்டுமே சொந்தமாயிருக்கிற இந்த சுமைதாங்கியளை நாங்களே இடிச்சால், அது எங்கட வரலாறை இடிக்கிறமாதிரியெல்லோ.

சாவகச்சேரிமாதிரி கன இடங்களில இப்பிடி சுமைதாங்கியள் பத்தையளுக்குள்ள, பராமரிப்பில்லாம இருக்குது. அதுகளைக் கண்டுபிடிச்சு, அதுகள் எல்லாம் தொல்லியல் சின்னம் எண்டு அடையாளப்படுத்தி, அழியாமல் பாதுகாக்கிற பொறுப்பு தொல்லியல் திணைக்களத்துக்கு இருக்கு. சிலவேளை அவையள் எங்கட இடங்களுக்குள்ள விகாரை கட்ட இடம் தேடுற வேலையில இருந்தால், இதுகள் கண்ணுக்குத் தெரியாதுதான். அதால, எங்கையெல்லாம் இப்பிடி சுமைதாங்கியள், ஆவுரஞ்சிக்கல்மாதிரி தொல்லியல் சின்னங்கள் இன்னும் அடையாளப்படுத்தப்படாமல் இருக்குதோ, அதுகளை அந்தத் திணைக்களத்துக்கு அறிவிச்சு காப்பாத்துற வேலையை நாங்கள்தான் பாக்கவேணும் கண்டியளோ.

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** உற்சாகமான நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகளுக்காக செலவு செய்ய நேரும். வெளியிடங்களுக்குச் செல்லும்போது உணவு, தண்ணீர் விஷயத்தில் அலட்சியம் காட்டவேண்டாம். யோகம் உண்டாகக்கூடும்.

**இடபம்:** புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் உறவினர்கள் வருகையால் செலவுகள் ஏற்பட்டாலும் மகிழ்ச்சியான செலவாகவே இருக்கும் காரியம் அனுகூலமாக முடியும்.

**மிதுனம்:** சாதிக்கும் நாளாக அமையும். தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக்கொள்வார்கள். அவர்கள் கேட்டதை வாங்கிக் கொடுப்பீர்கள். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கடகம்:** அனுகூலமான நாளாக இருக்கும். அரசாங்க வகையில் எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியக்கூடும். தந்தையின் மூலம் ஆதாயம் கிடைக்கும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படக்கூடும். அலுவலகத்தில் பணிச்சுமை அதிகரிக்கும்.

**சிம்மம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிப்பது நல்லது. மற்றவர்களால் மறைமுகத் தொல்லைகளும், விமர்சனங்களும் ஏற்படக்கூடும். குடும்பத்தில் சிறு சங்கடம் ஏற்படக்கூடும் என்றாலும், அதனால் பாதிப்பு எதுவும் இருக்காது. கூடுதல் கவனம் தேவை.

**கன்னி:** தெய்வ அனுகூலம் நிறைந்த நாளாக அமையும். குடும்பத்துடன் கோயிலுக்குச் சென்று வழிபடுவீர்கள். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். திடீர் செலவுகளும் ஏற்படக்கூடும். வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும்.

**துலாம்:** சாதிக்கும் நாளாக அமையும். வாழ்க்கைத்துணையால் எதிர்பாராத பொருள் சேர்க்கைக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையில் அந்நியோன்யம் அதிகரிக்கும். சக பணியாளர்கள் உதவி செய்வார்கள்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளைப் பிற்பகலுக்கு மேல் தொடங்குவது நல்லது. வெளியூர்ப் பயணங்களைத் தவிர்த்துவிடவும். பிற்பகலுக்கு மேல் காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

**தனுசு:** உற்சாகமான நாள். சுறுசுறுப்பாகச் செயற்படுவீர்கள். உறவினர்கள் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி உண்டாகும். புதிய முயற்சி சாதகமாக முடியும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைக்கக்கூடும்.

**மகரம்:** புதிய முயற்சிகளையும் பயணங்களையும் தவிர்க்கவும். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. சிறிய அளவில் உடல்நலம் பாதிக்கப்பட்டாலும், உரிய சிகிச்சையினால் உடனே சரியாகிவிடும்.

**கும்பம்:** மகிழ்ச்சி தரும் நாள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். உறவினர்களிடம் இருந்து நல்ல செய்தி கிடைக்கக்கூடும் பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** எடுத்த காரியம் அனுகூலமாகமுடியும். உறவினர்கள் வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு.

சுன்னாகம் ஸ்ரீ மயிலணி முத்துமாரி அம்மன் ஆலய சந்தோஷி மாதா ஹோம வழிபாடுகள் ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ. நா. சிவசங்கரக் குருக்கள் தலைமையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றன. (ச-41-66)



## இலவசக் கலை வகுப்புகள்

யாழ்ப்பாணம், செப்.10

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி கோவில் நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலையில் புதிய கலை வகுப்புகளான சங்கீதம், வயலின், மிருதங்கம் ஆகிய வகுப்புகள் சரஸ்வதி பூஜை விஷேட நன்னாளான எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

கோவில் பிரதமகுரு ஸ்கந்தகுரு ஞானபானு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்கள் முன்னிலையில் கோவில் பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதன்போது வாழ்த்துரையினை சிவநெறிப்பிரகாசர், சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கமும் கோவில் பரிபாலனசபை முன்னாள் தலைவர் த. நடராஜாவும் வழங்கவுள்ளனர்.

பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்கள் தங்கள் பதிவினை எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீர்வேலி ஸ்ரீ முருகன் அறநெறிப்பாடசாலையில் பதிவுசெய்துகொள்ளுமாறும் மேலதிகத் தொடர்புகளுக்கு 077 316 9301 எனும் தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

## செல்லப்பா சுவாமி குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.10

யாழ்ப்பாணம் நல்லூர்த் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் மாதாந்த குருபூசை நிகழ்வு நாளை வியாழக்கிழமை நல்லூரில் அமைந்துள்ள சுவாமிகளின் நினைவாலயத்தில் நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 9 மணிக்கு அபிஷேகம் இடம்பெற்றதைத் தொடர்ந்து, திருமுறை, நற்சிந்தனைப் பாடல்கள் ஓதப்படும். இதனையடுத்து, "நாவலர் பெருமான்" எனும் தலைப்பில், ஆசிரியர் சொல்வேந்தன் செ.சிறி ஆதவன் உரையாற்றவுள்ளார். (ச-41,66)

## தேசியமட்ட தடகளப் போட்டிகள் ஸ்கந்தாவுக்கு 2 பதக்கங்கள்

யாழ்ப்பாணம், செப்.10

93ஆவது தேசியமட்ட சிரேஷ்ட சேர் ஜோன். ராபெற் தடகளப் போட்டியில் யாழ்ப்பாணம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவிகள் இருவர் தங்கம், வெள்ளிப் பதக்கங்களைத் தனதாக்கியுள்ளனர்.

அதன்படி 16 வயது பெண்கள் பிரிவில் கோலூன்றிப் பாய்தலில் ப.வைஸ்ணவி 2.40 மீற்றர் உயரம் பாய்ந்து முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தைத் தனதாக்கிக்கொண்டார்.

சி.விதுர்சனா 2.30 மீற்றர் உயரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைத் தனதாக்கிக்கொண்டார். இந்தப் போட்டிகள் கொழும்பு தியகம மஹிந்த ராஜபக்ச விளையாட்டரங்கில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஆரம்பமாகின. (ச-இ)






தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டி

## ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி தேசியத்தில் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், செப்.10

தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஆண்கள் பிரிவில் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி மூன்றாம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது.

தேசியமட்ட உடற்பயிற்சிப் போட்டியில் ஊர்காவற்றுறைப் புனித அந்தோனியார் கல்லூரி ஆண்கள் பிரிவு இதுவரை பங்கேற்ற போட்டிகளில் 5 தங்கப்பதக்கம், 5 வெள்ளிப்பதக்கம், 4 வெண்கலப் பதக்கங்களை சுவீகரித்து அதிக பதக்கம் வென்ற பாடசாலைகளில் முன்னணி வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ச-41-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

உண்மை மனிதனுக்குச் சொந்தம். பிழை அவன் காலத்திற்குச் சொந்தம்.

– கதே–

# மாறுமா இலங்கை?

ஜெனிவாவில் ஆரம்பமாகியுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில், ஆணையாளர் வோல்கர் ட்ரக் இலங்கை தொடர்பாகக் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் சாதாரணமானவை அன்று. இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான வழக்குகளைக் கையாள்வதற்காக சுயாதீன விசேட சட்டவாதியின் பங்கேற்புடன்கூடிய பிரத்தியேக நீதிப்பொறிமுறையை இலங்கை அரசாங்கம் உருவாக்கவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியிருக்கின்றார்.

ஒவ்வொரு முறையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் போதெல்லாம், இலங்கை அரசாங்கங்கள் உடனடியாக உள்ளகரீதியில் நாங்கள் விசாரணை நடத்துவோம், நீதியையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவோம் என வாக்குறுதிகளை அளித்தன. ஆனால் அவை அனைத்தும் வெறும் வாய்மொழிகளாகவே இதுவரை இருக்கின்றன. இலங்கை அரசு முன்னெடுத்த சில முயற்சிகளும் சர்வதேச அழுத்தத்தைத் தற்காலிகமாகத் தவிர்க்கும் கருவிகளாக மட்டுமே காணப்பட்டன. அதே நேரம், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கவேண்டும் என்ற கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோது வெளிநாட்டுத் தலையீடு என்ற குற்றச்சாட்டுடன் அவற்றை மறுதலிக்கும் இலங்கை அரசு, குற்றங்களுக்குப் பொறுப்பானவர்களைச் சட்டத்தின் முன்நிறுத்த சிறுமுயற்சியேனும் எடுக்க மறுத்திருந்தது.

- போர்க்குற்றங்களில் ஈடுபட்டவர்களைப் பாதுகாத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதியை வழங்க மறுக்கும் இலங்கையின் இந்த முரட்டுப்பிடிவாதம் தற்போதைய அரசாங்கத்திலும் தொடர்கின்றது. உள்ளக விசாரணையின் மூலம் நீதி நிலைநாட்டப்படும் என்ற பழைய பல்லவியைப் பாடும் தற்போதைய அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் 'மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் ட்ரக் சுட்டிக்காட்டியிருக்கும் நியாயங்களையும்' பரிந்துரைகளையும் நிராகரித்திருக்கின்றது. தற்காலிக அரசியல் நன்மைக்காக பொறுப்புக்கூறலைத் தவிர்க்க முனைகின்றது. மறந்துவிடுங்கள், முன்னேறுவோம் என்ற அரசாங்கத்தின்நிலைப்பாடு, ஒருவகையில் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் இலங்கையின் கடந்தகாலப் போக்கின் ஒருவடிவமாகவே பாதிக்கப்பட்ட மக்களால் நோக்கப்படுகின்றது.

**இலங்கையின் இந்த முரட்டுப் பிடிவாதப்போக்கு ஒருபோதும் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தப்போவதில்லை. மாறாக உள்நாட்டில் ஒரு தரப்பு மக்களின் மனங்களில் விரிசலையும், மறுபுறத்தில் சர்வதேசத்துடனான மோதல் போக்கையுமே ஏற்படுத்தும். ஏற்கெனவே பல ஆண்டுகளாக இலங்கை சர்வதேச மேடைகளில் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளால் அழுத்தங்களைச் சந்திக்கும் நிலையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையைப் புறக்கணித்துச் செயற்படுவது புத்திசாலித்தனமானது அல்ல. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பொறுப்புக்கூறல் அலுவலகத்தால் இலங்கையின் கடந்தகால மீறல்கள் தொடர்பில் 105,000 ஆதாரங்கள் மற்றும் தகவல்கள் திரட்டப்பட்டுள்ளன என்று ஆணையாளர் வோல்கர் ட்ர்க் குறிப்பிட்டிருப்பதையும் சாதாரணமாகக் கடந்துவிட முடியாது. இலங்கை தொடர்ச்சியாக ஐ.நா.மனித உரிமைகள் பேரவையைப் புறக்கணித்துச் செயற்பட்டால் அந்த ஆதாரங்களை அடிப்படையாகக்கொண்டு முன்னெடுக்கப்படும்நடவடிக்கைகள் இலங்கைக்கு கடும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்பதையும் மறுக்கமுடியாது.**

நாட்டில் ஒரு தரப்பினரை மட்டும் திருப்திப்படுத்தும் நோக்குடன் முன்னெடுக்கப்படும் நகர்வுகள் ஒருபோதும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தமாட்டா, மாறாக மேலும் மேலும் பிளவை ஆழமாக்கும். கடந்தகால அரசாங்கங்கள் அதை உணரமறுத்துச் செயற்பட்டமையாலேயே இலங்கை தற்போதும் மனித உரிமைகள் தொடர்பான குற்றச்சாட்டுகளை எதிர்கொண்டு, சர்வதேச அரங்கில் தலைகுனிந்திருக்கின்றது. ஆகையால் தனது உள்ளகப் பொறிமுறை என்ற அழுங்குப்பிடியை விடுத்து, இனியாவது இலங்கை வாய்ப்புகளைப் பயன்படுத்தி தன்மீதான கறைகளைக் கழுவ இலங்கை முயற்சிக்கவேண்டும். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளரின் பரிந்துரைகளைச் சாதகமான முறையில் பரிசீலிக்கவேண்டும். அதுவே இலங்கை நல்லிணக்கம், அமைதி மற்றும் முன்னேற்றம் நோக்கிய பாதையைத் திறக்கும். பயன்படுத்தத் தவறினால், அதன் விளைவுகள் கடுமையாகவும் நீண்டகால பாதிப்புகளையும் ஏற்படுத்தக்கூடியவையாகவும் அமையும்.



# பொறுப்புக்கூறல்களில் இலங்கை பின்னடைவு



## ஐரோப்பிய ஒன்றியம் ஜெனிவாவில் சுட்டிக்காட்டு

**கொழும்பு,செப்.10**

**வலிந்து காணாமலாக்கப்பட்டோர் மற்றும் கடந்தகால உரிமை மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதில் இலங்கை பின்னடைவில் உள்ளது என்று ஐரோப்பிய ஒன்றியம் அதிருப்தி வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடர் ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. கூட்டத்தொடரின் ஆரம்ப அமர்வில் பேரவையின் ஆணையாளர் வோல்கர் ட்ரக், இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பாக உரையாற்றினார்.

அதனைத்தொடர்ந்து ஆணையாளரின் அறிக்கை மீதான விவா தத்தில், இலங்கையின் மனித உரிமைகள் நிலவரம் தொடர்பில், ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதி கருத்துரைத்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது- கடந்த காலத்தின் தொடர்ச்சியை முடிவுக்குக்கொண்டு வருவதற்கான வாய்ப்பு தற்போது அரசாங்கத்துக்குக் கிட்டியுள்ளது. அதேவேளை பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு அரசாங்கம் கொண்டிருக்கும் கடப்பாட்டுக்கு செயல்வடிவம் வழங்கவேண்டும். நிலைமாறுகால நீதி நிலைநாட்டப்படவேண்டியது அவசியம் - என்றார். (ச-இ)

# வாகனங்கள் நிறுத்தத் தடை

யாழ்ப்பாணம்,செப்.10

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை அமைந்துள்ள வீதியில், வர்த்தக நிலையங்களுக்கு முன்பாக வாகனங்களை நிறுத்த வேண்டாம் என்று பொலிஸார் அறிவித்துள்ளனர். நகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனவே வாகனங்களை ஒதுக்கப்பட்ட இடங்களில் நிறுத்தி மக்கள்தமதுதேவைகளை நிறைவேற்றவேண்டும் என்றும் அதனை மீறி வாகனங்களை நிறுத்துவோர்மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (ச-17)

# இரட்டைக்கொலை மூவர் கைது

கொழும்பு,செப்.10

இரட்டைக் கொலைத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் 3 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மித்தெனிய பொலிஸ் பிரிவின் தேக்கவத்த பகுதியில் கடந்த ஜூன் மாதம் 24 ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர்.

இதுதொடர்பான விசாரணையை குற்றப் புலனாய்வுப் பணியக அதிகாரிகள் முன்னெடுத்துவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# மின்சாரக் கொள்கையை வெளியிடுவதற்குக் குழு

கொழும்பு,செப்.10

தேசிய மின்சாரக் கொள்கை மற்றும் கொள்கை வழிகாட்டியை வெளியிடுவதற்கான குழுவை நியமித்தலுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. குறித்த குழுவை நியமிப்பதற்காக வலுசக்தி அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

# 78ஆவது சுதந்திரதினத்துக்கு அமைச்சரவை உபகுழு

கொழும்பு,செப்.10

78ஆவது சுதந்திரதின வைபவத்துக்கான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளுக்காக அமைச்சரவை உபகுழுவை நியமித்தலுக்கு அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது. பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் சமர்ப்பிக்கப்பட்ட யோசனையைக் கருத்திற்கொண்டு, 2026.02.04 அன்று 78ஆவது சுதந்திர தின வைபவத்தின் ஏற்பாடுகள், செயற்பாடுகளுக்காக பிரதமர் தலைமையிலும் மற்றும் அமைச்சர்களின் பங்கேற்பிலும் அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிப்பதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (ச-இ)

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளை
வியாழக்கிழமை - ஆவணி 26
11.09.2025
சுபநேரம் : 07.33 - 09.03
ராகுகாலம் : 01.35 - 03.09

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்மாய்த்தலைத் தடுப்பது அனைவரினதும் பொறுப்பு!

## சித்த வைத்தியர் சங்கம் சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம்,செப்.10**

**மனித வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களையும் இடர்பாடுகளையும் துணிச்சலுடன் எதிர்கொள்ளப் பழகுவதுதான் ஆரோக்கியமான உளவியல். எனவே மருத்துவர், உளவியல் நிபுணர் மட்டுமல்லாது குடும்பத்தினர் மற்றும் சமூக அமைப்பினர் அனைவரும் இணைந்து உயிர்மாய்ப்பைத் தடுக்கவேண்டியது அவசியம் என்று சித்த வைத்தியர் சங்கம் குறிப்பிட்டுள்ளது.**

இன்று உலகத் தற்கொலைத் தடுப்புதின மாகும். அதனை முன்னிட்டு சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உலக சுகாதார நிறுவனம் 2021ஆம் ஆண்டு வெளியிட்டுள்ள தகவலின்படி ஒவ்வொரு ஆண்டும் 7 இலட்சத்துக்கும் மேற்பட்டோர் உயிர்மாய்ப்புச் செய்கின்ற னர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்கொலை என்பது ஒரே காரணத்தால் ஏற்படும் செயல் அல்ல. அது மனவியல், சமூக, கலாசாரம் மற்றும் உடலியல் கார ணிகளின் கூட்டு விளைவு.

தென் ஆசியாவில், குறிப்பாக இந்தியா மற்றும் இலங்கையில் உலகின் உயிர் மாய்ப்பு விகிதங்கள் உயர்வாகப் பதிவா கியுள்ளன. மனச்சோர்வு, அச்சக் கோளாறு, போதைப்பொருள் அல்லது மதுபானப்பழக்கம், நீண்டநாள் நோய் கள், வலி, உடல் ஊனங்கள்,சமூக மற் றும் சுற்றுச்சூழல் காரணிகள், குடும்பப் பிரச்சினைகள், திருமண முறிவு, குடும்ப வன்முறை, வேலை இழப்பு, கடன், பொருளாதார அழுத்தம், கல்விச் சுமை மற்றும் இளமைக் குழப்பங்கள், தனிமை, சமூக அங்கீகாரம் இல்லாமை ஆகியன உயிர்மாய்ப்புகளைத் தூண்டு கின்றன.

பெரும்பாலான உயிர்மாய்ப்புகள் பொரு ளாதார நிலையில் பின்தங்கிய அல்லது மத்தியதர மக்கள் மத்தியில்தான் இடம் பெறுகிறது.

எனவே யோகா, பிராணாயாமம், தியா னம் போன்றவை நரம்பு மண்டலத்தைக் கட்டுப்படுத்தி எதிர்மறை எண்ணங்க ளைக் குறைக்கின்றன. சமநிலையான உணவு மூளையின் நலனுக்கு உதவு கிறது. சித்த வைத்தியம் உடல், மனம், ஆன்மா மூன்றையும் ஒரே சமயத்தில் கவனிக்கும் வைத்தியமாகும். இவற் றைப் பின்பற்றி உயிர்மாய்ப்புகளை தடுப்போம் - என்றுள்ளது. (ச-66)

# பதவி விலகினார் ஜப்பான் பிரதமர்

ஜப்பான் நாடாளுமன்றத்தின் இரண்டு சபைகளுக்கும் நடத்தப்பட்ட தேர்தலில் ஆளும் லிபரல் ஜனநாயகக் கட்சி தோல்வியடைந்துள்ள நிலையில் பெரும்பான்மை இழந்ததால் பிரதமர் ஷிகேரு இஷிபா பதவியில் இருந்து விலகியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்த பொருளாதார வரிப் பாதிப்புகள் காரணமாக ஜப்பானில் பெரும் குழப்பங்கள் ஏற்பட்டிருந்தன. குறிப்பாக ஜப்பான் மக்கள் கூடுதலா கப் பயன்படுத்தும் அரிசிக்கான வரி களை அமெரிக்கா விதித்ததால் மக் கள் கடும் விசனமடைந்தனர். இத னால் லிபரல் ஜனநாயகக் கட்சியின் தலைவரான பிரதமர், மக்களிடம் இருந்து கடும் எதிர்ப்புகளை எதிர் கொண்டார். அமெரிக்க வரிக்கு மாற் றீடாக அவரால் எதுவும் செய்யமுடிய வில்லை. இதனால் அரிசியின் விலை அதிகரித்துள்ளது. பாதிக்கப்பட்ட மக் கள் லிபரல் ஜனநாயகக் கட்சிக்குஎதிராக ஜப்பானில் போராட்டங்களைத் தொடர்ந்து நடத்தினர். இதன் காரணமாக ஜப் பான் நாடாளுமன்றத்தின் இரு சபை களுக்கும் தேர்தல் நடந்தது. இரண்டு சபைகளிலும் தோல்வியைச் சந்தித்து லிபரல் ஜனநாயகக் கட்சி, பெரும்பான் மையை இழந்தது. கடசிக்குள் உள்ளக மோதல்களும் ஆரம்பித்ததனால் கட் சித் தலைவர் பதவியையும் பிரதமர் பதவியையும் தானாகவே துறந்து கொண்டார். (ச-இ)



# விற்பனை நிலையத்தில் சி.சி.ரி.வி. கமரா திருட்டு

யாழ்ப்பாணம், செப்.10

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட் பட்ட அராலி தெற்கு, வட்டுக்கோட் டைப் பகுதியிலுள்ள விற்பனை நிலை யமொன்றில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.ரி.விக் கமரா ஒன்று களவாடப்பட் டுள்ளது. இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது. காலையில்விற்பனைநிலையத்துக்கு வந்த உரிமையாளர் கமரா களவாடப் பட்டு இருந்ததை அவதானித்த நிலை யில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலை யத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள் ளனர். (ச-27)

# புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு

## யாழ்ப்பாணம் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை

சைந்தவி ஜெகசீலன் 182, விபிஷா விஷ் ணுகரன் 166, லபோனா றேமண்ட் 164, நிவேதிகா முகிதரன் 162, வைகரி கிரீசன் 162, கிருத்திகா தனுஸ்யந்தன் 158, புவியா காண்டீபன் 153, திஷாரா அழ கேந்திரன் 152, இவான்ஜலின் ஹரிதரன் 152, தேனுஜா கதிர்காமநாதன் 149, சௌதாமினி சுதர்சன் 149, ஹரிஸ்ணவி சந்திரகுமார் 149, வர்ஷாலி ஐங்கரன் 148, பிரணவி நிஷாந்தகுமார் 147, மதுர்னா இராசகுமார் 147, சாருக்ஷி சதீஸ் 145, தியாறா யசோதரன் 145, சுதர்ணி ஸ்ரீஜெயந்தன் 145, ஷாத்விகா திலீப்குமரன் 144, அட்சயா மோகனதாஸ் 144, தன்ஷிக்கா சர்வானந்தன் 144, அர் விதா சிவசங்கர் 144, கவீசனா கிருஸா னந்தம் 143, தனுஸ்கா தனுசியன் 143, கம்ஷிகா கஜேந்திரன் 143, அர்த்தனா அயந்தன் 143, ரேஸ்மி ரமணன் 142 தேனிகா சுகிர்தராஜ் 141, ஷர்மிதா சுதாக ரன் 141, விதுஷனா சுதர்சன் 141, சானிதா அகிலரூபன் 139, பிருதிகா சுபாதரன் 139, வித்யசஹி வித்யபரசர்மா 139, டுசியா ஸ்ரீகீதன் 138, அபினிசா அரவிந் தன் 138, அபிஷ்கா ஸ்ரீசண்முகராசா 132, நரமிஷா தயாரூபன் 137, பவிஷா சிறீகரன் 136, வர்சிகா செயிந்தன் 135, தக்சனா கிருஸ்ணதாஸ் 134, அனுஸ்கா தீபன் 133, தேனுசா கஜந்தன் 132, அட் சயா அலைக்சன் 132

## யா/கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

ற.ஹரிசரன் 140, ஜெ.ஜொய்சி 134, ப.லிஷாந் 133,

## செம்பியன்பற்று அ. த. க. பாடசாலை

கி. றபிசன் 150, கி. டவிசன் 137 (9)

## யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை




ஜெ.விகாசினி177, ச.ஆருத்ரா168, கௌ.அஸ்விகா167, ப.கிருஷிகா164, ரா.அபிஷேக்161, ந.வர்ஷிகன்161, பி.அனந்தன்160, சு.கின்ஷிகா160, ஜெ.தண்சிகா160, ச.டன்ஷிகா158, டே. அனுஜிகா156, ம. லக்க்ஷிகன்155, கு. தனுஜனன்154, டி.பியோனா152, ஆ. வைஷ்ணவி152, நி. சாருஜன்150, ச.சபரீ சன்150, அ.இஷானிகா149, தி. ஆரு ஷன்149, கா.துஷால்148, சி.கோமி தன்148, நி.அனன்ஜா148, கு. ஸப்தகி147, த. ஷஸ்வித்146, மோ. அஸ்மிதன்144, க.கிருத்திக்ஹா144, யோ. தஷ்வினா143, ச. சருக்சயன்143, ப. கவின்ஷா143, சு.கௌசிகன்142, சு.ஷாகித்யா141, அ. யரிஷ்140, இ.அட்சகன்139, நி.தேவகி139, பே. அக்ஷயா138,கு.சதுஜன்138, மு. அட் சயா137, அ.ஆருரன்136, ஐ.பவீனன்136, ர. யஷ்வினி133, பி.ஜஸ்மிதா132, ந.தஷ்மி132, சி.ஆதுசன்132



# பெண்நாய்களுக்கு இலவசக் கருத்தடை

யாழ்ப்பாணம், செப்.10

வடக்கு மாகாண சுகாதார அமைச்சு, விவசாய அமைச்சு மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் ஒன்றிணைந்த பங்களிப்பின்கீழ் வடக்கு மாகாண கால்நடை உற்பத்தித் திணைக்களத்தின் ஊடாக வலிகாமம் கிழக்குப் பிரதேசசபையினால் பெண்நாய்களுக்கான இலவசக் கருத்தடைச் சத்திரசிகிச்சை செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. அந்தவகையில், இன்று புதன்கிழமை காலை 8.30மணி தொடக்கம்பி.ப. 4மணி வரை புத்தூர் உப அலுவலகம், நாளை வியாழக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் பி.ப. 4மணி வரை அச்சுவேலி உப அலுவலகம், நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் மதியம் 12.30 மணி வரை உரும்பிராய் உப அலுவலகம், மு.ப.8.30மணி தொடக்கம் பி.ப.4மணி வரை அண்ணா சனசமூக நிலையம், 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணி தொடக்கம் பி.ப. 4மணி வரை வன்னியசிங்கம் சனசமூக நிலையம் ஆகிய இடங்களில் சிகிச்சை மேற் கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-41)

# கார்–மோட்டார் சைக்கிள் விபத்து



யாழ்ப்பாணம், செப்.10

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பலாலி வீதி உரும்பிராய் கற் பக பிள்ளையார் ஆல யத்துக்கு அருகாமை யில் காரும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துள்ளாகியுள் ளன. இந்த விபத்து நேற்று மதியம் நடந் துள்ளது. இதன்போது மோட்டார் சைக் கிள் மற்றும் கார் என்பன பகுதியளவில் சேதமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளில் சென்றவர் சிறிய காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

விபத்துச் சம்பவம் தொடர்பான விசார ணைகளைக் கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ச-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தசாக கிருஹயக்ஞ அழைப்பு



கடந்த (02.09.2025) செவ்வாய்க்கிழமை பூர்வபக்க
தசமி திதியில் சிவபதப்பேறடைந்த
எமது குடும்பத் தலைவர்,
கௌசிக கோத்திரம்
**சிவஸ்ரீ. நாகராஜ ஐயர் நடராஜக்குருக்கள்**
அவர்களது ஆத்மசாந்திக்கிரியைகள் பின்வரும்
தினங்களில் எமது இல்லத்தில் நடைபெறும்.

11.09.2025 (ஆவணி 26) வியாழக்கிழமை தசாகம் காலை 07.00 மணி
12.09.2025 (ஆவணி 27) வெள்ளிக்கிழமை ஏகோதிஷ்டம், மாசிகம்
13.09.2025 (ஆவணி 28) சனிக்கிழமை சபீண்டீகரணம்
14.09.2025 (ஆவணி 29) ஞாயிற்றுக்கிழமை கிருஹயக்ஞம் பகல் 11.00 மணி

மேற்படி கிரியை நிகழ்வுகளில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு எதிர்வரும் (14.09.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று எமது இல்லத்தில் நடைபெறவிருக்கும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
கிளுவானை ஒழுங்கை,
கோப்பாய் மத்தி, கோப்பாய்
0759067306, 0706679461,
0777903959

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
## உப அலுவலகம் - நீர்வேலி
## ஆதனப் பெயர் மாற்றம் தொடர்பான அறிவித்தல்
## வட்டாரம் - 02, மாலை வைரவர் வீதி, ஆதன இல - 50 / 15

யாழ்ப்பாணம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் நீர்வேலி உப அலுவலகத் திற்குட்பட்ட வட்டாரம் - 02 மாலைவைரவர் வீதி, ஆதன இல: 50/15 சொந்தக் காரர், உ.கோ- இராசேந்திரம் என ஆதனப்பதிவேட்டில் காணப்படுகின்றது.

குறித்த ஆதன இலக்கத்தினை உடைய ஆதனத்தின் ஒரு பகுதியினை நீர்வேலி தெற்கு நீர்வேலியைச் சேர்ந்த இராசேந்திரம் சந்நிதி என்பவர் "எனது பிதா காலஞ்சென்ற கனகசபை இராசேந்திரம் என்பவருக்கு ஆதியில் இருந்து அவர் குறித்த ஆதனத்தை ஆண்டனுபவித்துத் தத்துவம் எடுக்க வேண்டிய பணத் தொகைக்குக் குறைவான மரணச்சொத்துக்களை விட்டும் அவரின் ஏக உரித்தாளராக அவரின் மகனான என்னை விட்டும் இறக்க குறித்த ஆதனம் எனக்கு அவர் வழியால் பிதா வழி முதுசமாக வந்தடைந்து எனது நெடுங்காலத் தடையற்ற ஆட்சியில் உள்ளது என்றும் வெளிப்படுத்தி நொத்தாரிசு கனகரத்தினம் கேசவனால் எழுதப்பட்ட 15305ஆம் இலக்க 2016.07.03ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் நீர்வேலி மேற்கு, நீர்வேலி கந்தசாமி இரவீந்திரனும் பெண் சுதாஜினியும் என்பவர்களுக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் நீர்வேலி மேற்கு நீர்வேலியினைச் சேர்ந்த கந்தசாமி இரவீந்திரனும் பெண் சுதாஜினியும் என்பவர்கள் நொத்தாரிசு சிவசுப்பிரமணியம் ஜோதிலிங்கம் என்பவரால் எழுதப்பட்ட 929ஆம் இலக்க 2024.10.02ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் கோப்பாய் மத்திய ஆசாரி ஒழுங்கை குமாரகுலசிங்கம் சுதனும் பெண் றெக்காவும் என்பவர்களிற்கு வழங்கியுள்ளனர்.

**ஆதன இடாப்பு :**

வட மாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் கிழக்குப் பகுதி, கோப்பாய் கோவிற் பற்று,கோப்பாய் பிரதேச செயலகம் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி தெற்கு, நீர்வேலி J/270 கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட நீர்வேலி மேற்கு இறை "மாலை" நில.பர.மூன்று குளி இரண்டு தசம் மூன்று எட்டு (3.28) உம் குழாய் கிணறும் பயிர்வகைகளும், இதில் நிலப்பரப்பு ஒன்று குளி ஐந்து தசம் ஆறு சைபர் (நி.பர 1 குளி 5.60). இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.மயூரனின் 2024.02.06ஆம் திகதிய 1069ஆம் இலக்க நில அளவைப் படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு ஒன்று குளி ஐந்து தசம் ஆறு சைபர்க்கும் எல்லை ( வரைபடத்தின்படி)

கிழக்கு : துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்ட பாதை
வடக்கு : ரவீந்திரன் சுதாஜினியின் ஆதனம்
மேற்கு : வைரவன் சின்னையாவின் ஆதனம்
தெற்கு : ஒழுங்கை முகப்பின் ஒரு பகுதியும் கந்தசாமி ஜெயலக்ஸ்மியின் ஆதனம் இதடங்கலாக கிழக்கெல்லையோரமாக பிரதான வீதிக்கு செல்லும் பாதையில் பாவிப்புரித்தும்.

தற்போது இவ் ஆதனத்தினை குமாரகுலசிங்கம் சுதனும் பெண் றெக்காவும் என்பவர்கள் ஆதனப் பதிவேட்டில் தமது பெயரிற்கு மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இது தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் எமக்கு அறியத்தர முடியும். ஆட்சேபனைகள் ஏதும் இல்லாதவிடத்து அல்லது யாரேனும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது "குமாரகுலசிங்கம் சுதனும், பெண் றெக்காவும்" என்னும் பெயரிற்கு பெயர் மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு இவ் ஆதனத்தினை பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எவ்விதமான பிரச்சினைகளுக்கும் வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை பொறுப்பேற்காது என்பதனையும் அறியத்தருகின்றேன்.

**தவிசாளர்,**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை**
**புத்தூர்.**

# பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம் அபிவிருத்தி குறித்து கலந்துரையாடல்

பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகத் தின் அபிவிருத்தி தொடர்பாக இந்தியக் குழுவினருடனான கலந்துரையாடல், யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அலு வலகத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற் றது.

கலந்துரையாடலில் பருத்தித்துறைத் துறைமுக அபிவிருத்தியின் அவசியம், தேவைப்பாடுகள் அதனால் ஏற்படும் சாதகங்கள், மீனவர்களுக்கான நன் மைகள், தொழில் வாய்ப்புகள் தொடர் பாக மாவட்டச்செயலரால் விளக்கமளிக் கப்பட்டது. யாழ்.மாவட்டச் செயலர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் இடம்பெற்ற கலந் துரையாடலில் யாழ்.இந்தியத் துணைத்தூதரக உதவித் தூதுவர் சங்கரன் இராஜ கோபாலன், தூத ரக அதிகாரிக ளான என்.ரவி சங்கர், எம். பி.பெலியப்பா, யாழ்.மாவட்டச் செய லகத் திட்ட மிடல் பணிப்பா ளர் உள்ளிட்டோர் கலந்துகொண்ட னர்.

(ச-66.113)

## பதவி வெற்றிடங்கள்

**தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை மற்றும் அதன் யாழ் சேவை நிலையத்திற்கு பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் பொருத்தமானவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.**

| விபரம் | ஆளணி எண்ணிக்கை |
|---|---|
| தாதிய உதவியாளர் (With NVQ Level 4) | 3 |
| வரவேற்பு உத்தியோகத்தர் | 2 |
| முதியோர் பராமரிப்பாளர் | 3 |
| சுத்திகரிப்பாளர் | 4 |
| தொழிலாளி | 2 |

விண்ணப்பிக்க விரும்புவோர் தங்களின் சுயவிபரத்தினை எமது tellicoophospital@gmail.com என்னும் மின்னஞ்சல் முகவரியூடாகவும், 0767711417 என்ற Whatsapp இலக்கத்தினூடாகவும் எதிர்வரும் 2025.09.15 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

மேலதிக தகவல்களுக்கு : 0776367378, 0772380196

தலைவர் - தெல்லிப்பளை கூட்டுறவு வைத்தியசாலை தெல்லிப்பளை

## வேலையாள் தேவை

யாழ் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியிலுள்ள நிறுவனத்திற்கு பகுதி நேர வேலைக்கு தொழிலாளி தேவை.
தங்குமிடம் தரப்படும்.

**077 953 0496**


## உடனடி விற்பனைக்கு

அலுவலக பாவனையில் இருந்த Printers, Laptop, Photocopier, Scanner என்பன விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: **077 302 4234**

# மரண அறிவித்தல்

பிறப்பு
16 . 06 . 1937



இறப்பு
09 . 09 . 2025

## அருணாசலம் இராமலிங்கம்

மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அருணாசலம் இராமலிங்கம் அவர்கள் நேற்று (09.09.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம்-வள்ளிப்பிள்ளை தம்பதியின் பாசமிகு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா-பொன்னாச்சி தம்பதியின் பாசமிகு மருமகனும், சோதிப்பிள்ளை அவர்களின் அன்புக் கணவரும், சிறிகலா, சிறிகாந்தன் (லண்டன்), சிறிதேவி, சிறிஅரவிந்தன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சர்வேஸ்வரன் (சம்மேளன தலைவர்-சந்திரபுரம்), தமயந்தி, மயூரன் (கருணாலயம்-நீர்வேலி), கார்த்திகா ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை, சின்னத்தம்பி, கந்தையா, சின்னம்மா ஆச்சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலஞ்சென்ற கனகம்மா மற்றும் செல்லத்துரை, ஐயாத்துரை ஆகியோரின் மைத்துனரும், சங்கீர்த்தன் (கனடா), ஹரிசரன், நிவேதன், நிகிலன், பிருத்திகன், அஸ்ஷா, அனுஜன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2025) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டையடி தூவு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் வடக்கு,
சந்திரபுரம்,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைப்பரிசில் பரீட்சை; மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், செப். 10

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வொன்று, கொமர்ஷல் வங்கியின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலையில் இன்று இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன், கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் அன்னலிங்கம் ரவீந்திரன் மற்றும் யாழ்ப்பாணம் வலயக் கல்விப் பணிப்பாளர் மாலதி முகுந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ம)

## நேபாளத்தில்...

தொடர்ந்து, நாடாளுமன்றம் ஆர்ப்பாட்டக் காரர்களால் கைப்பற்றப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, பிரதமர், ஜனாதிபதி உள்ளிட்ட அனைவரும் கூண்டோடு பதவி விலகியுள்ளனர்.

நேபாளத்தின் பிரதமர் சர்மா ஒலியின் அரசாங்கத்துக்கு எதிராக நீண்ட நாள்களாக ஊழல் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வந்தன. இதனால், தாம் மீண்டும் மன்னராட்சி முறைக்குச் செல்ல விரும்புவதாகத் தெரிவித்து பொதுமக்கள் அவ்வப்போது போராட்டம் நடத்தி வந்தனர். இதன் தொடர்ச்சியாக, கடந்த வாரம் இளைஞர்களின் ஏற்பாட்டில் தலைநகர் காத்மண்டுவின் பல இடங்களில் போராட்டம் வெடித்தது.

போராட்டம் தீவிரமாகாமல் இருப்பதைத் தடுக்கும் விதமாக 26 சமூக வலைத்தளங்களை கடந்த ஐந்தாம் திகதி நேபாள அரசாங்கம் நிரந்தரமாக முடக்கியது. அரசாங்கத்தின் இந்தச் செயல் போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்களை மேலும் ஆவேசப்படுத்தியதைத் தொடர்ந்து, ஜனநாயக ஆர்ப்பாட்டங்கள் கலவரங்களாக மாற்றம் பெற்றன.

இதன் உச்சக்கட்டமாக தலைநகர் காத்மண்டுவில் உள்ள நாடாளுமன்றம் ஆர்ப்பாட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டுத் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, நேபாளத்தின் பிரதமரும் அதிபரும் பதவி விலகுவதாக அறிவித்துள்ளனர். எனினும், கலவரங்கள் கட்டுக்குள் வரவில்லை.

அதிபர் மாளிகை, பிரதமரின் மாளிகை, நீதிமன்றக் கட்டடங்கள் என்பனவும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. முன்னாள் பிரதமர்கள் பிரசண்டா, ஷெர் பகதூர் தேவ்பா, அமைச்சர் பிருத்வி உட்பட மூத்த அரசியல் தலைவர்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. ஊழலுடன் தொடர்புடைய முன்னாள் பிரதமரின் மனைவி உயிருடன் எரித்துக் கொல்லப்பட்டுள்ளார்.

இந்தக் கலவரங்களில் இதுவரை நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும், அறுநூறுக்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர் என்றும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

நாடாளுமன்றம் தீக்கிரையாக்கப்பட்டுள்ள நிலையில், நாட்டின் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தக்கூடிய இறுதிக் கட்டமைப்பான உச்ச நீதிமன்றத்துக்கு அதியுயர் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. (அ-ம)

## மரண அறிவித்தல்



தோற்றம் 19 . 05 . 1989

மறைவு 06 . 09 . 2025

### ஜெகநாதன் நிஷாந்தன்

(நாதஸ்வர வித்துவான்)

ஜெகநாதன் நிஷாந்தன் அவர்களின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2025) வியாழக்கிழமை அன்று காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அதியார் செல்லமுத்து வீதி
மானிப்பாய் தெற்கு, மானிப்பாய்.

தகவல் குடும்பத்தினர்
077 122 3062

## மாபிள் வேலை

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில்
அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
ஒரு சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா

077 334 1281

## தவறவிடப்பட்டுள்ளது

கொக்குவில் சந்திக்கும் குளப்பிட்டி சந்திக்கும் இடையில் பேர்ஸ் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். கனகரத்தினம் ரஜிவ்காந்தன் சங்கரப்பிள்ளை வீதி, ஆனைக் கோட்டை. 861153975V

தொடர்புகளுக்கு:
077 694 9757, 075 651 6703

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 22 . 11 . 1995

மறைவு 04 . 09 . 2020

### அமரர் தேவராசா ரதீஸ்வரன்

திதி: தேய்பிறை திருதியை

காலமெல்லாம் எங்களை காத்திடுவோம்
என எண்ணினோம் ஆனால்
காலனவன் உனைக்கவர்ந்து
ஆண்டுகள் ஐந்து ஆனததையா
நெஞ்சினிலே உம்மை வைத்து
நினைவெல்லாம் உமக்காய்
நாம் வடிக்கும் கண்ணீர்
விலகவே இல்லை ஐயா
உம் ஆத்மா சாந்தியடைய
இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

இல: 92 கலாசாலை வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்
பெற்றோர்
தேவராசா மல்லிகாதேவி

(CS/30256) J-1

## பிறப்பும் இறப்பும் கடவுள் அருள்
## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (13.08.2025) அன்று இறைவன் அடி சேர்ந்த
எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் துரைராசா சாந்திக்குமார்

(சாந்தன் வெல்டிங் வேக் சொப் உரிமையாளர்)

தோற்றம் 10.05.1970 — மறைவு 20.06.2025

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (10.09.2025) புதன்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எதிர்வரும் (12.09.2025) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்திலும் நடைபெற உள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மா சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்
மனைவி : சாந்திக்குமார் சகுந்தலாதேவி
மகள்மார் : தவதுர்சனா, தவவர்சனா,
அத்தான், அக்கா, புஸ்பராசு கருணாதேவி.
077 935 2412, 077 968 7683

(CS/30259) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'ஐயப்ப சேவா மன்றம்' அங்குரார்ப்பணம்


யாழ்ப்பாணம், செப்.10
தென்மராட்சி தனங்களப்பு அறுகு வெளி அருள்மிகு சபரீஸ்வர ஐயப்ப சேவா மன்றம் அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது. ஆரம்ப நிகழ்வாக விநாயகர் வழிபாடு இன்று புதன்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறும். நாளை வியாழக்கிழமை பால்காப்பு இடம்பெறும். நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை திருக்குடமுழுக்கு நன்னீராட்டு விழா காலை 5 மணிமுதல் காலை 7 மணி வரை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-25)

## நல்லூரில் யோகாக் கற்கை

யாழ்ப்பாணம்,செப்.10
வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகினால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகாக்கலை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின்வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் ஆரம்பமாகவுள்ளது.
அதன்படி எதிர்வரும் 13ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகும் இந்தக் கற்கைநெறி சனி ஞாயிறு தினங்களிலும் அரச வி முறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை நடை பெறும்.
ஆர்வமுள்ள இருபாலாரும் வயது வேறுபாடின்றிக் கலந்துகொள்ள முடியும். சுமார் மூன்று மாத காலங்களை கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கை நெறியைப் பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சினால் அங்கீ கரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப் படவிருக்கின்றன. பயிலவிரும்புவோர் அன்றையதினம் நேரடியாக வந்து பதிவுகளை மேற்கொண்டு வகுப்பில் இணைந்துகொள்ளுமாறும் மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ச-இ)




நீர்வேலி அரசகேசரிப் பிள்ளையார் ஆலயத்தின் தீர்த்தோற்சவம் நேற்றுக் காலை தீர்த்தத் தடாகத்தில் பக்தி பூர்வமாக இடம்பெற்றது. (ச-17)



## புதிய தலைமுறைக்குப் புத்தாக்கக் கல்வி

### தேசிய வேலைத்திட்டம் பிரதமரால் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,செப்.10
விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சினால் பாடசாலைகள் மத்தியில் 100 புத்தாக்கச் சங்கங்களை நிறுவும் தேசிய வேலைத்திட்டம், பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் பேராசிரியர் கிரிஷாந்த அபேசேன ஆகியோரின் தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடக் கேட்போர் கூடத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.
நிகழ்வில் இந்தப் புத்தாக்கச் சங்கங்களை உத்தியோகபூர்வமாக ஆரம்பிப்பதைக் குறிக்கும் வகையில் நாட்டின் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்திய 9 பாடசாலைகளுக்கு பிரதமரின் கையால் புத்தாக்க நினைவுச்சின்னங்கள் வழங்கி வைக்கப்பட்டன.
தேசிய பொருளாதாரத்துக்கு வழங்கக்கூடிய பங்களிப்பு, பாடசாலை மட்டத்திலான புத்தாக்க வாய்ப்புகள் மற்றும் சவால்கள், புத்தாக்கச் சங்கங்களை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு, புதிய கண்டுபிடிப்புகளுக்கான காப்புரிமைகளைப் பெறுவதன் முக்கியத்துவம், மற்றும் கல்விச் சீர்திருத்தங்கள், புதிய கண்டுபிடிப்புகள், மற்றும் புத்தாக்கங்கள் மூலம் ஒரு படைப்பாற்றல் மிக்க தொழிலாளர் படையை நாட்டில் உருவாக்குதல் என்பன புத்தாக்கங்களை ஊக்குவிப்பதன் நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டும் மணிவிழா வாழ்த்தும்

Congratulations!

யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் ஆசிரியராக 01.01.2016 - 09.09.2025 வரை கடமையாற்றி பணியில் இருந்து ஓய்வு பெறும்



## திரு. கனகரத்தினம் தேவபாலன்

(பகுதித் தலைவர் - விஞ்ஞானபாட ஆசிரியர்)

அவரது பணிநயந்து பாராட்டி வாழ்த்துவதோடு அவரின் ஓய்வுக்காலம் சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

**சேவைக்காலம் :**

- 03.04.2000 - 13.06.2001 - யா/ இளவாலை கென்றியரசர் கல்லூரி
- 14.06.2001 - 30.06.2003 - பலாலி ஆசிரியர் கலாசாலை
- 01.07.2003 - 31.12.2007 - யா/ இளவாலை கென்றியரசர் கல்லூரி
- 01.01.2008 - 31.12.2015 - யா/ அராலி இந்துக் கல்லூரி
- 01.01.2016 - 09.09.2025 - யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்

Congratulations

வாழ்த்துவோர்:

**அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்**

**யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம்**

(CS/59359) J-1


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை - 2025 பெறுபேற்றில்

## யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம்

### வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது.

- தென்மராட்சி கல்விவலயத்தில் வெட்டுப் புள்ளிக்கு மேல் கூடிய வீதாசாரத்தைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுள்ளது.
- பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 50% மாணவர்கள் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்றுள்ளனர்.
- 100 புள்ளிகளிற்கு மேல் அனைத்து மாணவர்களும் பெற்று 100% சித்தி பெற்றுள்ளனர்.



ற.ஹரிசரன்
**140 புள்ளிகள்**



ஜெ.ஜொய்சி
**134 புள்ளிகள்**



ப.லிஷாந்
**133 புள்ளிகள்**



வி.சதுனன்
**125 புள்ளிகள்**



க.யஸ்விகன்
**111 புள்ளிகள்**



பா.அஜீன்
**102 புள்ளிகள்**

சாதனை படைத்த மாணவச்செல்வங்களை பாராட்டி வாழ்த்துகின்றோம். தரம் 5 இல் கற்பித்த ஆசிரியர் செல்வி. த. சோபிதா . வழிப்படுத்திய அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **பாடசாலைச் சமூகம்**

**யா/ கைதடி சேதுகாவலர் வித்தியாலயம் - கைதடி மத்தி**

(CS/59360) J-1

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதன் பொய்கை

10.09.2025
புதன்கிழமை


இன்று அனுபவிக்க முடிந்த ஒன்றை நாளை வரை தள்ளிவைக்க வேண்டாம்.

- ஜோஷ் பில்லிங்ஸ்

# உயிர்மாய்ப்புகள்

## மனிதகுலத்தின் முதன்மைச் சத்துருக்கள்!

■ நடராசா கோபிராம்

அரிது அரிது மானிடராய் பிறப்பது அரிது' என ஔவையார் மனிதரின் பிறப்புப் பற்றியும், வாழ்க்கை பற்றியும் கூறுகிறார். எத்தனை உயிரினங்கள் இருந்தாலும்கூட மனிதப் பிறப்பு அற்புதமானது. ஆனால், வரமாய் வாய்க்கும் இந்த மனிதப் பிறப்பைக்கூட தவறான முடிவுகளால் முடித்துக் கொள்ளும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால் உயிர்மாய்ப்புகளைக் கட்டுப்படுத்தும்வகையில் 2003ஆம் ஆண்டுமுதல் உயிர்மாய்ப்பைத் தடுக்கும் வகையில் விசேட தினம் கடைப்பிடிக்கப்பட்டுவருகின்றது.




உலக சுகாதார ஸ்தாபனத்தின் தற்போதைய ஆய்வுகளின்படி வருடத்துக்கு 8 இலட்சத்துக்கும் அதிகமானோர் தற்கொலை செய்கின்றனர். அதாவது 40 செக்கனுக்கு ஒரு நபர் என்ற ரீதியில் தவறான முடிவெடுத்து உயிர் மாய்க்கின்றனர். ஒருவர் உயிர் மாய்க்கும் நேரத்தில் 10 தொடக்கம் 15 மனிதர்கள் தற்கொலைக்கு முயற்சிப்பதுடன் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் அதனைப் பற்றிச் சிந்தித்துக்கொண்டிருப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. ஒருவர் உயிரைமாய்த்துக் கொள்வதற்குப் பல்வேறு காரணங்கள் முன்னிறுத்தப்படுகின்ற போதிலும் சில காரணங்களைக் குறிப்பிட்டுக்கூறமுடியும்.

மனச்சோர்வு, பொருளாதாரப் பிரச்சினை, போதைப் பொருள் பாவனை, சமூக வலைத்தளங்கள் மற்றும் ஊடகங்களின் தவறான செயற்பாடுகள், மனநலப் பிரச்சினைகள், காதல் தோல்வி, குடும்பம் மற்றும் உறவுப் பிரச்சினைகள், தொழில்நுட்ப சாதன ஆளுகை, குழந்தைப்பருவம் முதல் தவறான அழுத்தங்கள் மற்றும் அறியாமை, இவ்வாறான பல்வேறுபட்ட காரணங்களின் அடிப்படையில் மக்கள் உயிர் மாய்க்கின்றனர். தற்கொலை செய்பவர்களை நாம் பலவழிகளில் அடையாளம் கண்டுகொள்ளமுடியும். குறிப்பாக, உடல் உள நடத்தை ரீதியில் பலமாற்றங்களை கண்டுகொள்ளலாம். இதைப்பற்றி அதிகம் பேசுவார்கள், உணவு மற்றும் உடை அதிகளவில் நாட்டமின்மை, தனிமையை விரும்பல், படிப்பில் நாட்டமின்மை, உடற்சோர்வு, வேலையில் தரம் குறைதல், பாலியல் விருப்பமின்மை, உணர்ச்சிவசப்படுதல், ஒதுங்கியிருத்தல், அடிக்கடி சோகம் முதலான பல்வேறுபட்ட அறிகுறிகள் மூலம் அவர்களை அடையாளங்காணமுடியும். உயிர்மாய்ப்புக் காரணமாக பல விளைவுகளும், தாக்கங்களும் ஏற்படும் என்பது அனைவரும் அறிந்ததே. இது தனியே ஒருவரைப் பாதிப்பதில்லை, ஒரு சமூகத்தையே பாதிக்கின்றது. ஒரு தனிநபர் இறக்கும் போது அவருடன் நெருங்கிய தொடர்புடைய 6 நபர்களை பாதிப்பதாக ஆய்வுகள் கூறுகின்றன. வாழ்க்கையின் முடிவு எனக் கருதி செய்யும் உயிர்மாய்ப்பு அவர்களின் குடும்பம் மட்டுமன்றி பலரையும் பாதிப்பது நாம் அறிந்ததே. சமூக ஊடகங்களின் தவறான செய்திபரப்புதல்மூலம் அதிகம் பரப்பப்பட்டு இதன்மூலம் பலர் தற்கொலைக்கு தூண்டுவதற்கும் மனப் பாதிப்புகள் உருவாகவும் வழிவகுக்கின்றது.

### எவ்வாறு தடுப்பது?

'சுயதீங்கு' எனக் குறிப்பிடப்படும் இந்த உயிர்மாய்ப்பை நாம் எவ்வாறு தடுக்கலாம் அல்லது தீர்வு காணலாம் எனப் பார்க்கலாம்.

### சீரான தொடர்பாடல்

உயிர்மாய்ப்பு எண்ணம் உள்ளவரை நாம் அடையாளம் கண்டால் அவரை அழைத்து அவரின் பிரச்சினைகளை முழுமையாகக் கேட்கவேண்டும். நான் உன்னுடன் இருக்கிறேன். என்ற நம்பிக்கையை அளித்தல் வேண்டும். அவர்களின் மனக்குமுறல்களை செவிசாய்த்துக் கேட்பதன் மூலம் தவறான முடிவெடுப்பதில் இருந்து அவரை மீட்கமுடியும்.

### உளநல ஆலோசகரை நாடல்

உளவியல்சார் ஆலோசனை வழங்குவதன்மூலம் உயிர்மாய்ப்பைத் தடுக்கமுடியும். உளவளத் துணையாளரிடம் சேர்ப்பதன்மூலம் பிரச்சினையை இனங்கண்டு தீர்வு வழங்கவும் முடியும். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் உளவளத்துணை முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது. ஆனால் எமது நாட்டில் இன்றும் அதற்கான பூரண அறிவு மக்களிடையே இல்லாமல் காணப்படுகிறது. உளவளத்துணையை சரியானமுறையில் வழங்குவதன் மூலம் மனச்சோர்வைக் களைந்து தற்கொலை எண்ணத்தை நீக்கி மனிதனை சீராக வாழ ஆற்றுப்படுத்துகிறது.

### ஆலோசனை மையங்களை நிறுவுதல்

அறிவுரைகள் வழங்கக்கூடிய ஆலோசனை மையங்களை நிறுவுதல் மூலம் உதவுவது உடல் உளரீதியான உதவியாக இருக்கும். உலகளாவிய ரீதியில் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் இவை பரவலாகச் செயற்பட்டுவருகின்றமை நாம் அறிந்ததே. நமது நாட்டிலும் சுமித்ரயோ என்ற அமைப்பு 1974ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு உயிர்மாய்ப்பைத் தடுப்பதற்கான விழிப்புணர்வுகள், கருத்தரங்குகள் ஆகியவற்றை முன்னெடுத்து வருகின்றது. இதன் ஆய்வின்படி வவுனியா, மொனராகலை மாவட்டங்களிலும் வடமேல் மாகாணங்களிலும் அதிக உயிர்மாய்ப்பு இடம் பெறுவதாகக் கூறுகிறது.

### வாழும் திறன்களை வளர்ப்பு

நாம் வாழும் வாழ்க்கையில் பல்வேறுவிதமான ஏமாற்றம் தோல்வி என்பன அடிக்கடி ஏற்படும். இதற்காக நமக்கு பக்குவப்பட்ட மற்றும் தெளிவான உள்ளம் தேவை. இதற்காக வாழும் திறன்களான சமுதாயத்திறன்கள் பிரச்சினையிலிருந்து எப்படி விடுபடுவது, கையாள்வது, புதியனபற்றி யோசிக்கும் திறன், பிரச்சினையை எதிர்கொள்ளல், தீர்த்தல், மனிதத் தொடர்பு, தைரியமாக இருப்பது ஆகியவற்றை வளர்த்துக்கொள்வதன்மூலம் உளரீதியான மேம்பாடு, தெளிவு மற்றும் பக்குவநிலை ஏற்பட்டு வாழ்க்கை சிறப்பாக வழிவகுக்கும்.

### சுயமரியாதை மேம்பாடு

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளுக்கு ஒழுக்கம் அறிவுசார் வாழ்வியல் கல்வியைச் சரியான முறையில் போதிப்பது அவசியம். வாழ்வின் சிறப்பு மற்றும் அதன் முக்கியத்தும் என்பன பற்றிக் கற்பித்தல் வேண்டும். இன்றைய கல்விமுறை தனியே பாடத்திட்டத்தை ஒட்டி அமைகிறதேதவிர வாழ்க்கை மற்றும் ஒழுக்கம் சார்ந்து அமைவது குறைவாகவே காணப்படுகின்றது. ஒவ்வொருவரும் தனது பலம், பலவீனம், வாய்ப்புகள், சவால்கள் என்பவற்றைக் கண்டறிந்து தன்னம்பிக்கையை வளர்க்கவேண்டும்.

### போதைப்பொருள் தடுப்பு

போதைப்பொருளை இயன்றளவு குறைப்பதன்மூலம் உயிர்மாய்ப்புகள் நிகழ்வது மட்டுமன்றி அதனுடன் தொடர்புடைய வன்முறைகள் சீரழிவுகளைக் குறைக்கமுடியும். சிறுவயதிலிருந்தே மாணவர்களுக்கு போதைப்பொருள் விழிப்புணர்வுகளைக் குடும்பம் மற்றும் பாடசாலையிலிருந்து ஏற்படுத்துவது முக்கியமானதாகும்.

### சுயகட்டுப்பாடு

சுயமதிப்பீடு போல சுயகட்டுப்பாடும் ஒருவன் குறிப்பிட்ட சூழலில் சரியானமுறையில் தெளிவான முடிவுகளை எடுப்பதற்கும் அவசியமாகிறது. தன்னம்பிக்கை மற்றும் சுவாரஸ்யமான தருணங்களைத் தாங்கும்திறன் நல்லது கெட்டது எது என அறியும் திறனை வளர்த்துக்கொள்வதும் முக்கியமாகிறது.

### தியானம் மற்றும் யோகாசனம்

உடற்பயிற்சி செய்வதன்மூலம் உடல் மற்றும் மனம் இரண்டும் நலமான நிலையை அடைகின்றன. இதுமட்டுமன்றி தியானம் மற்றும் யோகாசனம் என்பனவும் மனதை ஒரு நிலைப்படுத்தவும், நேரான சிந்தனைகளை ஏற்படுத்தவும் மனம் தெளிவடையவும் தன்னம்பிக்கையைக் கட்டியெழுப்பவும் உறுதுணையாக அமைகின்றன.

### ஆன்மிகச் செயற்பாடுகள்

ஆன்மிகம்சார் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தி மனதை ஓர் பரிசுத்த நிலையை அடைய வழிவகுக்கிறது. அனைத்து சமயங்களும் பொதுவாக நல்ல கருத்துகள்மூலம் மனிதனை நேர்வழி நடத்தவே உதவுகின்றன. இவ்வாறான அறநெறிச் செயற்பாட்டில் ஆர்வம் கொண்டு ஈடுபடுவதன்மூலம் ஆரோக்கியமான நல்வாழ்க்கையைக் கட்டியெழுப்பலாம். அத்தோடு தற்கொலை தடுப்புப் பற்றிய பரப்புரையை மக்கள் கருத்தாக மாற்றி அனைவரும் கரம்கோர்த்துச் செயற்பட்டால் உயிர்மாய்ப்பு எனும் கொடிய பிரச்சினையை முற்றாக ஒழிக்கமுடியும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் பொருளாதாரத்தில் மீட்சிக்கான பாதை

பகுதி: VI



**பூங்கோதை இரத்தினவடிவேல்,**
பிரதிப் பணிப்பாளர்,
தொடர்பாடல் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி




இலங்கையின் கடன் நிலைபேறானதன்மைப் பகுப்பாய்வின்படி, நாட்டில் கடன் நிலைபேறானதன்மையை மீட்டெடுப்பதற்காக பின்வரும் இலக்குகள் அடையப்பட வேண்டியதாயிருந்தன.

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் வெளிநின்ற பொதுக்கடனை 2032ஆம் ஆண்டளவில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 95 சதவீதத்திற்குக் கீழ் குறைத்தல்.
2. அரசாங்கத்தின் மொத்த நிதியியல் தேவைப்பாட்டை 2027 முதல் 2032 வரையிலான காலகட்டத்தில் சராசரியாக 13 சதவீதத்துக்கும் குறைவாகப் பராமரித்தல்.
3. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் அரசாங்கத்தின் வருடாந்த வெளிநாட்டு நாணயக் கடன் பணிக்கொடுப்பனவுகளை ஒவ்வோர் ஆண்டிலும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 4.5 சதவீதத்துக்கும் குறைவாகப் பராமரித்தல்.

ஆரம்பத்தில், அரசாங்கம் வெளிநாட்டுக்கடன் மறுசீரமைப்பினை மேற்கொள்வதில் மாத்திரமே கவனம் செலுத்தியது. எனினும், பின்னர் உள்நாட்டுக் கடனையும் இக்கடன் மறுசீரமைப்பில் உள்ளடக்குவதற்கு அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்பட்டது. உள்நாட்டு வங்கித்துறை ஏற்கனவே அரசாங்கப் பிணையங்களில் அதிக அளவில் முதலீடு செய்திருந்ததால், மேலதிகக் கடன் சுமையினைத் தாங்கும் அளவுக்குப் போதுமான மூலதனத் தாங்கியிருப்புகளைக் கொண்டிருக்கவில்லை. மேலும், உள்நாட்டுக் கடனின் கணிசமான பகுதி ஊழியர் சேமலாப நிதியம் போன்ற ஓய்வூதிய நிதியங்களால் பேணப்பட்டமையினால், இவற்றின்மீது பெரளவிலான கடன் தள்ளுபடியினை மேற்கொள்வது பொது ஓய்வூதிய சேமிப்பைப் பாதித்து, நிதியியல் அமைப்பை சீர்குலைத்து, பரந்த சமூக அமைதியின்மையைத் தூண்டக்கூடும் என்ற கரிசனைகளைத் தோற்றுவித்தன. இந்தக் காரணிகளைக் கருத்திற்கொண்டு, அரசாங்கம் பெரளவிலான கடன் தள்ளுபடியினை விதிப்பதற்குப் பதிலாக, முதிர்வு கால நீடிப்புகள் மற்றும் வட்டி வீதக் குறைப்புகளைச் செயற்படுத்துதல் போன்ற மிகவும் வினைத்திறன்மிக்க அணுகுமுறைகளைக் கையாண்டது. இந்த உபாயமானது நிதி ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து முக்கியமான சமூக நிறுவனங்களுக்குப் பாதிப்பு ஏற்படாமல் காக்க உதவியது.

இலங்கையின் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு மிகவும் சிக்கலானதாக அமைந்ததற்கு பின்வருவன முக்கியமான காரணங்களாக அமைந்தன:

i. கடன் மறுசீரமைப்புக்கான அபிவிருத்தியடைந்த 20 நாடுகளைக் கொண்ட குழு பொதுக்கட்டமைப்புக்கான (G20 commno framework for debt treatment) அணுகல் இல்லாமை

ii. இருதரப்பு, பல்தரப்பு மற்றும் நாட்டிற்கான சர்வதேச முறிகளை (International Sovereign Bonds) வைத்திருக்கும் தனியார் கடன் வழங்குநர் உட்பட அதன் கடன் வழங்குநர்களின் பன்முகத்தன்மை

iii. மறுசீரமைப்புச் செயற்பாட்டின்போது நிதி மற்றும் சமூக ஸ்திரத்தன்மையைப் பேணவேண்டிய அவசியம்

இவற்றுடன் சர்வதேச நாணயநிதியத்தின் கடன் நிலைபேறானதன்மைப் பகுப்பாய்வு வரம்புகளுக்கிசைவாக சமமான சுமைப் பகிர்வை உறுதிசெய்வதற்கான அர்ப்பணிப்பும் முக்கியமானதாகக் காணப்பட்டது.

(மிகுதி அடுத்தவாரம்)



# தலைக்கவசங்களும் பாதுகாப்பான பயணங்களும்

■ **மருத்துவர் பா.சயந்தன்**
குழந்தைகள் சிறுவர்கள் சத்திரசிகிச்சை நிபுணர்
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும்
சிரேஷ்ட விரிவுரையாளர், மருத்துவபீடம், யாழ்ப்பாணம்

இலங்கையில் பள்ளிக் குழந்தைகள், தொழிலாளர்கள் மற்றும் கிராம வாசிகளுக்கு சைக்கிள்கள் தினசரிப் போக்குவரத்து முறையாக உள்ளன. அவை மலிவானவை, ஆரோக்கியமானவை மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்தவை. இருப்பினும், சைக்கிள் ஓட்டுபவர்களின் பாதுகாப்பு கவனிக்கப்படுவதில்லை. இலங்கையில் மோட்டார் சைக்கிள் ஓட்டுநர்கள் ஹெல்மெட் அணிய வேண்டியது சட்டப்படி அவசியமாக இருந்தபோதிலும் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு அவ்வாறான நடைமுறைகள் இல்லை.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மற்றும் பல பிற மருத்துவமனைகளில், சைக்கிள் விபத்தில் சிக்கியவர்களுக்குக் கடுமையான தலைக்காயங்கள் ஏற்பட்டு அனுமதிக்கப்படும் சம்பவங்கள் அதிகம் பதிவாகியுள்ளன.

**சர்வதேச ரீதியான பதிவுகள்**

1990ஆம் ஆண்டுகளின் முற்பகுதியில் அனைத்துச் சைக்கிள் ஓட்டுநர்களுக்கும் கட்டாயம் ஹெல்மெட் சட்டங்களை அறிமுகப்படுத்திய நாடுகளில் அவுஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து ஆகிய நாடுகள் முக்கியமானவை. இந்த நாடுகளின் ஆய்வுகள், சட்ட அமுலாக்கலின் பின்னர் சைக்கிள் ஓட்டுநர்களிடையே கடுமையான தலைக் காயங்கள் 40 வீதம் தொடக்கம் 60 வீதம் வரையில் குறைந்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அமெரிக்கா மற்றும் கனடா நாடுகள் மாநில அல்லது மாகாண அளவிலான ஹெல்மெட் சட்டங்களைக் கொண்டுள்ளன. ஐரோப்பிய நாடுகள் வேறுபடுகின்றன. நெதர்லாந்து மற்றும் டென்மார்க்கில், ஹெல்மெட் பயன்பாடு குறைவாகவே காணப்படுகிறது. இருப்பினும், இந்த நாடுகள் பாதுகாப்பான சைக்கிள் ஓட்டுதல் உள்கட்டமைப்பில் அதிக முதலீடு செய்கின்றன. இதற்கு நேர்மாறாக, இலங்கையின் சாலைகள் காணப்படுகின்றன.
சிங்கப்பூரும் ஜப்பானும் விழிப்புணர்வு மற்றும் கடுமையான சாலை ஒழுக்கம்மூலம் ஹெல்மெட் பயன்பாட்டை ஊக்குவிக்கின்றன.

**இலங்கை எங்கே நிற்கிறது**


இலங்கையில், சைக்கிள் ஓட்டிகளுக்கு ஹெல்மட் தொடர்பில் கட்டாய சட்டங்கள் எவையும் இல்லை. மோட்டார் சைக்கிள் ஹெல்மெட் சட்டங்கள் இறப்புகளைக் கணிசமாகக் குறைத்தாலும், சைக்கிள் ஓட்டுபவர்கள் பாதுகாப்பற்றவர்களாகவே உள்ளனர். எங்கள் சாலைகள் பேருந்துகள், லொரிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களால் நிரம்பியுள்ளன பிற நாடுகளில் சைக்கிள்களுக்கு எனத் தனிப்பாதைகள் உள்ளன.

**மாற்றத்தை உருவாக்குவோம்**

**சட்டமியற்றுபவர்கள்:** அனைத்து சைக்கிள் ஓட்டுநர்களுக்கும் கட்டாய ஹெல்மெட் சட்டங்களை அறிமுகப்படுத்துங்கள்.
**பள்ளிகள்:** மாணவர் பாதுகாப்பின் ஒரு பகுதியாக ஹெல்மெட்களை அமுல்படுத்துங்கள்.
**பெற்றோர்:** 'ஹெல்மெட் இல்லை என்றால், சவாரி இல்லை' என்பதை இறுக்கமாகக் கடைப்பிடிக்கவேண்டும்.
**சைக்கிள் ஓட்டுபவர்கள்:** உங்கள் தலைக்குப் பெறுமதி கொடுங்கள், உங்கள் ஹெல்மெட்டை அணியுங்கள்.
உயிர்களைக் காப்பாற்றுவதில் ஹெல்மெட்களின் செயற்திறனை மற்ற நாடுகள் ஏற்கனவே நிரூபித்துள்ளன. தடுக்கக்கூடிய காயங்களால் ஏற்படும் மரணங்களை குறைத்தே ஆகவேண்டும்.
ஹெல்மெட் எளிமையானதாகத் தோன்றலாம், ஆனால் அதுவே வாழ்க்கையா அல்லது மரணமா என்பதைத் தீர்மானிக்கும் காரணி. இலங்கையிலுள்ள ஒவ்வொரு சைக்கிள் ஓட்டுநர்களுக்கும் அதன் அவசியத்தை உணர்த்துவோமாக. ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பண்ணாகம் மெய்கண்டான்:



எழுத்தறிவித்து ஏணியாக நின்ற கல்விக்கூடம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

**ராணி சீதரன்**
*சிரேஷ்ட விரிவுரையாளர் (ஓய்வுநிலை)*
*தேசியகல்வி நிறுவகம்.*

இந்த அனுபவம் எனக்குப் புதுவிதமான படிப்பினையைத் தந்தது. எனது கற்பித்தலைப் பிள்ளைகளின் விருப்பத்திற்குரியதாக மாற்றுவதற்கு வழிசமைத்தது. வகுப்பறையை மகிழ்ச்சிகரமாக வைத்திருப்பதற்கும், பாடத்தை விருப்பத்திற்குரியதாக மாற்றுவதற்கும் என்னென்ன வழிகளைக் கண்டறிந்து பின்பற்ற முடியுமோ அவற்றைக் கைக்கொண்டேன். தண்டனைகளைத் தவிர்த்துத் தட்டிக்கொடுத்தபோது மாணவர்கள் அனைவருக்கும் நல்லதொரு வழிகாட்டியாக நண்பனாக, விருப்பத்துக்குரியவராக மாறக்கூடியதாக இருந்தது. எனவே கணக்கு வாத்தியார் கடைப்பிடித்த கண்டிப்பு எனது தொழிலைச் சிறப்புற மாற்றிக்கொள்ள வழிகாட்டியது எனலாம்.

'காலை தோறும் அடுப்பு மூட்டிக் காப்பியப்பம் தோசை சுட்டுக் கடைத் தெருவில் விற்று வந்தாள் ஒரு கிழவி' என ஆரம்பப் பிரிவிலே 'பாக்கியம் டீச்சர்' அபிநயத்தோடு பாடிக் கற்பித்த இந்தப் பாடல் இன்று வரையும் அவரின் அபிநயத்தோடு மனதிலே ஆழமாகப் பதிந்திருக்கின்றது. 'சரக்கு முதலும்' 'பரப்பளவும்' சொல்லித் தந்த நடராசா வாத்தியார் கண்டிப்பு நிறைந்தவர் என்றாலும் அன்பாகவும் பண்பாகவும்தான் கற்பித்தார். அவர் சொல்லும் வரையும் கணக்குப்புரியும். பின்னர் எதுவுமே தெரியாதமாதிரி மனம் தடுமாறும். ஆசிரியரில் தவறு ஏதுமில்லை. நாம் அடிப்படையைச் சரியான முறையில் பெற்றுக்கொள்ளத் தவறியதன் விளைவே என்பது புரிந்தது. நெசவு 'பொன்னம்மா டீச்சர்', சுகாதாரம் 'கனகம்மா டீச்சர்', உடற்கல்வி 'நேசம்மா டீச்சர்' என இவர்கள் பாடத்தை மட்டுமல்ல நல்ல பழக்கவழக்கங்களையும் கற்றுத் தந்தார்கள். ஒன்பதாம் வகுப்பிலிருந்து எனக்குத் தமிழ் கற்பித்தவர் பண்டிதர் அ. ஆறுமுகம். தமிழை அழகாக உச்சரிக்கவேண்டும் என்பதை அவர் பேசுவதில் இருந்தே கற்றுக்கொண்டேன்.

என்னிடம் இருக்கும் திறமைகளைச் சரியாக இனம் கண்டவர் மட்டுமல்ல தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்தியவர் எனது தமிழ் ஆசிரியராவார். 'கலியுக வரதன் கந்தன்' என்ற தலைப்பில் பேச்சை எழுதித் தந்து, பாடமாக்க வைத்து,விசவத்தனை முருகன் கோயில் எட்டாம் திருவிழாவில் பேசவைத்தார். அதனால் பலரிடம் பாராட்டைப் பெறவைத்தது மட்டுமன்றி, எனக்குப் பேசத் தெரியும் என்பதை நான் அறிந்துகொள்ளவும் செய்தார். இன்றுவரை சிங்கப்பூர், மலேசியா, இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் செல்லும் போது பேசக்கிடைக்கும் சந்தர்ப்பங்களிலும்,யாரிடமாவது பாராட்டைப் பெறும்போதும் நான் எனது தமிழ் ஆசிரியரை நன்றியுடன் நினைவுகூர மறப்பதில்லை. அதேபோல எனக்கு நடிப்பைக் கற்றுத்தந்தார். 'கங்காதேவி' என்ற நாடகத்தில் பிரதான பாத்திரமான கங்காதேவியாக நடிக்க வைத்தார். நாடகத்தில் கடற்கரையில் கங்காதேவி நடனமாடும் காட்சிக்காக நடன ஆசிரியரை அழைத்து எனக்கு நடனம் பழக்கினார். ஒரு தமிழாசிரியர் எவ்வாறிருக்க வேண்டும் என்பதற்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் பண்டிதர் வாத்தியார்.

'கண்டதையும் வாசியுங்கோ பண்டிதராக வருவீர்கள்' என மாணவர்களிடம் வாசிப்புப் பழக்கத்தை ஊக்கப்படுத்தினார். அதனால் எனது பொழுதுபோக்காக வாசிப்பைத் தெரிவுசெய்தேன். அம்புலிமாமா, துப்பறியும் கதைகள், மர்ம நாவல்கள் என்பவற்றை விரும்பிப் படித்ததால் எனது எழுத்தாற்றலை வளர்த்துக்கொண்டேன். 'கலைக்கோபுரம்' என்ற கையெழுத்துச் சஞ்சிகை வெளிவந்தபோது நான் ஒன்பதாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தேன். அதற்கு மாணவர்களிடமிருந்து ஆக்கம் தரும்படி கேட்டார்கள். அதற்காக 'வேதனை' என்ற சிறுகதையை எழுதினேன். அது பிரசுரிக்கப்பட்ட போது உள்ளம் பூரித்து மகிழ்ந்தேன். விளையாட்டுப் போட்டியில் அஞ்சலோட்டத்திற்குப் பெயர் கொடுத்த போது 'ஓடுபவர்களைத் துரத்துவதற்கும் ஒருவர் தேவைதானே போ' எனக் கேலி செய்தவர்களையும் பொருட்படுத்தாது பங்குபற்றி எமது அணியும் எமதுசிவப்பு இல்லமும் வெற்றிபெறுவதற்கு என்னாலான பங்களிப்பைச் செய்தேன். அதுமட்டுமல்ல அந்தக் காலத்தில் அங்கு கற்பித்த ஆசிரியர்களின் பிள்ளைகள் மட்டுமல்ல உறவினர்கள், நெருங்கிப் பழகிய தோழிகள் அனைவரும் ஐந்தாம் வகுப்புக்குப் பின்னர் ஒவ்வொரு வருடமும் ஏதோ ஒரு காரணத்தைச் சொல்லி வேறுபாடசாலைக்குச் சென்றுவிட தனித்துப்போன உணர்வுடன் போராடியபோது அதுவே படிக்கவேண்டும் என்ற உத்வேகத்தை எனக்குக் கொடுத்தது. அந்தக்காலத்தில் எந்தவொரு பாடத்திற்கும் ரியுசனுக்குப் போகாது ஆசிரியர்கள் கற்பிப்பதை மட்டும் படித்துச் சிறந்த பெறுபேற்றைப் பெற்றிருந்தேன்.



முன்னாள் அதிபர் செ.சீனிவாசன்

கணிதபாடத்தை வெறுத்ததன் விளைவு பெருமைப்பட்டுக் கொண்டாட முடியாத பெறுபேறாகியது.அப்பொழுது பண்ணாகம் மெய்கண்டானில் உயர்தர வகுப்புகள் ஆரம்பிக்கப் படாமையினால் சுழிபுரம் விக்டோறியாக் கல்லூரியில் சேர்ந்து படித்துக்கொண்டே கணித பாடத்திற்குத் தோற்றித் திறமைச்சித்தியைப் பெற்றேன். இப்பொழுது எப்படி முடிந்தது.? என என்னை நானே கேட்டுக்கொள்வேன்.நாம் வெறுப்பது எம்மை வெறுக்கும் என்பது இயல்பு என உணர்ந்துகொண்டேன். இவ்வாறு பள்ளிக் காலத்திலேயே எனக்குள் இருக்கும் திறமைகளைச் சரியான முறையில் இனங்கண்டு தட்டிக்கொடுத்து ஊக்கப்படுத்தி வளர்த்தமையால்தான் நான் ஓர் எழுத்தாளராக உருவாக முடிந்தது. அவ்வாறு உருவாக்கியதில் பாடசாலைக்கும் ஆசிரியர்களுக்கும்; பெரும் பங்குண்டு என்பதை நூற்றாண்டு விழாக் காணும் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியறிதலோடு நினைந்து வாழ்த்துகிறேன்.

பள்ளிப்பருவம் அற்புதமான பருவம் அதில் எம்மை நாம் புடம் போட்டுக்கொள்ளவேண்டும். சரியான முறையில் எம்மை வழிப்படுத்திக்கொண்டோமானால் அது நமது வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து சாதிக்கும் பலத்தைத் தரும். பிள்ளைகளே! எம்மை உருவாக்குவதும் உருக்குலைப்பதும் அடுத்தவர்களின் கைகளில் இல்லை. எமது கைகளிலேதான் உள்ளது. அறியாமையால் மற்றவர்களின்மீது குற்றத்தைச் சுமத்தித் தப்பித்துக் கொள்கிறோம்.கிடைக்கும் சந்தர்ப்பத்தைச் சரியான முறையில் பயன்படுத்தத் தெரிந்தவன் வாழ்க்கையில் வெற்றியடைகிறான். பேசிவிட்ட வார்த்தையும் கடந்துவிட்ட காலமும் இழந்துவிட்ட சந்தர்ப்பமும் திரும்பப் பெறமுடியாதவை.

எனவே தொழில்நுட்ப யுகத்திலே வாழுகின்ற நாம் எல்லாவற்றையும்; சாதிக்கமுடியும் என எண்ணாது, எமக்கு மேலே ஒரு சக்தி இருக்கிறது அது எம்மை எப்பொழுதும் அவதானித்துக் கொண்டிருக்கின்றது என்ற உயர்ந்த எண்ணத்தோடு வாழ்வோமானால் எம்மை எந்தவிதத் தீமைகளும் அணுகாது. அதுமட்டுமல்ல நாம் எங்கே போகப்போகின்றோம் என்ற ஓர் இலட்சியத்தை வகுத்துக் கொண்டு வாழப்பழகினால் எமது சிந்தனை அந்த இலக்கை நோக்கியதாகவே இருக்கும். எனவே இலக்கு நோக்கிய எமது வாழ்க்கைப் பயணத்தை நல்லமுறையில் அமைத்துக் கொள்வதற்கு பள்ளிப் பருவம் சிறந்ததொரு அத்திபாரமாக அமையும்.

எங்களை உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு நல்கிய ஒவ்வொருவருக்கும் நாம்; நன்றி உடையவர்களாக இருக்கவேண்டும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று சொல்லுவார்கள். இன்று அவ்வாறு மதிக்கின்ற நிலை அருகி வருகின்றது. பணிவு கொள்ளவேண்டும். அன்பு காட்ட வேண்டும், மூத்தோருக்கு மதிப்பளிக்கவேண்டும், உதவிசெய்யவேண்டும். இவ்வாறு நல்ல எண்ணங்களை எமது மனதில் நிறைத்தோமானால் நமக்குள்ளே இருக்கும் கூடாத சிந்தனைகள் மறைந்துவிடும்.

எம்மை நோக்கி நல்லவையே வந்து சேரும். மனக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி, ஆரோக்கியமான உணவு, என்பவற்றோடு நேரத்தையும் பொன் போலப் போற்றப் பழக வேண்டும். எல்லோரது வாழ்விலும் பள்ளிப்பருவம் மறக்கமுடியாத பல பதிவுகளால் நிரம்பியிருக்கும். அவ்வாறு என்னைச் செதுக்கிய காலத்தின் சில எச்சங்களை நினைவுபடுத்தியதன் மூலம், உங்கள் வாழ்க்கையை மாற்றிய சந்தர்ப்பங்களையும் அவற்றிலிருந்து கற்றுக்கொண்டவற்றையும் நீங்களும் சிந்தியுங்கள், செயற்படுங்கள். எழுத்தறிவித்து எம்மை இந்நிலைக்கு உயர்த்திய எமது பாடசாலை சாதனை பல படைத்துப் புகழ் ஏணியின் உச்சிக்குச் சென்று மிளிரும்என பழையமாணவர் சார்பாக நூற்றாண்டு கால வாழ்த்தைக் கூறுகின்றேன். 'வாழ்க பண்ணாகம் மெய்கண்டான் மகாவித்தியாலயம். வளர்க என்றென்றும் அதன் பணி'

பண்ணாகம் மெய்கண்டான் மகா வித்தியாலய நூற்றாண்டுவிழா செப்ரெம்பர் 4ஆம் திகதியே. கடந்த வார புதன்பொய்கையில் 8 திகதி என்று தவறுதலாகப் பிரசுரமாகிவிட்டது. தவறுக்கு வருந்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாகாணசபைத் தேர்தல்களை இழுத்தடிக்க எண்ணவில்லை!

அரசாங்கம் அறிவிப்பு

மாகாணசபைத் தேர்தலை இயலுமானவரை விரைவில் நடத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாக உள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். மாகாணசபைத் தேர்தலை இலங்கை நடத்த வேண்டுமென ஜெனிவா கூட்டத்தொடரில் இந்தியா கோரிக்கைவிடுத்துள்ளது. இந்தியா முன்வைத்துள்ள கோரிக்கை தொடர்பில் அமைச்சர் நளிந்தவிடம் ஊடகவியலாளர்கள் வினவியுள்ளனர். இதன் போதே, மாகாணசபைத் தேர்தலை இழுத்தடிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்று கூறியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தல் நிச்சயம் நடத்தப்படும் என்று நாங்கள் வாக்குறுதி வழங்குகின்றோம். எனினும், சில சட்டச் சிக்கல்கள் காரணமாக மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படும் கால எல்லையை உறுதியாகக் கூற முடியாதுள்ளது. வாய்ப்புக் கிடைத்தால், உடனடியாகத் தேர்தலை நடத்தவும் அரசாங்கம் தயார் என்றும் அமைச்சர் நளிந்த தெரிவித்துள்ளார். (ம-44)

# திருடனெனச் சித்திரித்து வீடியோ; மனமுடைந்தவர் உயிர்மாய்ப்பு

நபரொருவரைத் திருடன் என நினைத்துக் கட்டிவைத்து அடித்து அதனைக் காணொலியாக எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவிட்ட சம்பவத்தில் பாதிக்கப்பட்ட நபர் தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் கொழும்பில் வெலிமடையில் நடந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கொழும்பில் இருந்து வெலிமடை நோக்கிப் பஸ்ஸில் பயணித்த குறித்த நபர் நித்திரையால் தான் செல்ல வேண்டிய இடத்தைத் தாண்டிச்சென்ற நிலையில் ரம்பொட பகுதியில் அதிகாலை 2 மணியளவில் இறங்கியுள்ளார். உறவினர் ஒருவரைத் தேடிச் சென்ற அவர் தவறுதலாக வேறொரு வீட்டின் கதவைத் தட்டியுள்ளார்.


இதைக் கண்ட வீட்டின் உரிமையாளர்கள், குறித்த நபரைத் திருடன் என நினைத்து கிராம மக்களுடன் சேர்ந்து கடுமையாகத் தாக்கி, மரத்தில் கட்டிவைத்து தாக்கியதுடன் சம்பவத்தைக் காணொலியாக எடுத்து சமூக வலைத்தளங்களில் பதிவேற்றியுள்ளனர்.

பின்னர், கிராம மக்களால் கொத்மலைப் பொலிஸாரிடம் அவர் ஒப்படைக்கப்பட்டநிலையில் அவர் குற்றமற்றவர் என்பது தெரியவந்ததையடுத்து பொலிஸார் அவரை உறவினர்களிடம் ஒப்படைத்தனர். எனினும் கிராம மக்கள் அவரைத் தாக்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் பரவியதால் மனமுடைந்த நபர் தவறான முடிவெடுத்து தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். இந்தச் சம்பவம் குறித்து கொத்மலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வஜிரா ரத்நாயக்க தலைமையில் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. (ச-இ)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 05 . 1960



மறைவு 09 . 09 . 2025

### அமரர் ஆறுமுகம் ஜெகநாதன்

**(இலங்கை சீமேந்து கூட்டுத்தாபனம் - காங்கேசன்துறையின் பொருத்துனரும், கொக்குவில், ஹட்டன் தொழினுட்பக் கல்லூரியின் பகுதிநேர விரிவுரையாளர், சமாதான நீதவான்)**

கலைவாணி வீதி தையிட்டியை பிறப்பிடமாகவும் மாலியவத்தை சங்கானையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் ஜெகநாதன் (09.09.2025) அன்று காலமாகிவிட்டார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - நாகேஸ்வரி தம்பதியினரின் இளைய மகனும், காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - தங்கமணி தம்பதியினரின் மருமகனும் கனகாம்பிகையின் அன்புக் கணவரும், சாம்பவி (பிரான்ஸ்), துலக்ஜா (ஆசிரியை உடுவில் மகளிர் கல்லூரி), துவாரகன் (Civil Engineer), வைஸ்ணவி (Software Engineer) ஆகியோரின் அன்புத் தந்தையும், பற்குணசிங்கம் (கனடா), லோகநாயகி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், வைஜீவன் (பிரான்ஸ்), தஸ்னீன்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (10.09.2025) புதன்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்:**
குடும்பத்தினர்
**075 267 9523**

## மரண அறிவித்தல்



### பரமு மகேந்திரன்

பிறப்பு 25.10.1951

இறப்பு 07.09.2025

காரைநகர், களபூமி, பாலாவோடையை பிறப்பிடமாகவும் விளானையை வசிப்பிடமாகவும் கொண்ட பரமு மகேந்திரன் கடந்த 07.09.2025 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமு - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சண்முகம் - கமலம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசேஸ்வரியின் அன்புக் கணவரும், மஞ்சுளா (சுவிஸ்), மோகனரஞ்சன் (மட்டக்களப்பு), டுகினா (திருச்செந்தூரான் முன்பள்ளி ஆசிரியை), சோபனா, டயானா (கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியை), புவீந்திரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சண்முகானந்தன் (சுவிஸ்), சாம்பசிவம், சுபமூர்த்தி, ஆனந்தராசா ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவபாதசுந்தரம், காலஞ்சென்ற காசிப்பிள்ளை, சுப்பிரமணியம், யோகேஸ்வரி, ஞானசம்பந்தன், காலஞ்சென்ற கெங்காதரன், வசந்தகுமாரி, வசந்தமலர், செல்வராசா, இராசகுமாரி ஆகியோரின் மைத்துனரும், சோபிகா, மதுசன், தவலோசனா, கமலினி, டர்சிகா, ஜதுகரன், சுபபாலினி, தருணிகா, கிரித்திக், அருண் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (11.09.2025) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 8.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக தில்லை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**விளானை, களபூமி, காரைநகர்.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**மகன் - 076 45 26 244**

(CS 59347) A

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலட்டியில்...

பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ஹைஏஸ் ரக வாகனத்தில் வந்த கும்பலொன்று, மோட்டார்சைக்கிளில் பயணித்த இளைஞரை மோதி வீழ்த்திவிட்டு அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதலை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸாரின் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படுகாயமடைந்த இளைஞர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (அ-ம-26)

## முன்னாள்...

முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய சிறப்புரிமைகளை நீக்குவது தொடர்பான சட்டவரைவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்ட நிலையில், இந்த நகர்வு அரசமைப்புக்கு முரணானது அல்ல என்று உயர்நீதிமன்றம் சட்ட விளக்கம் வழங்கியுள்ளது. அதனால் நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மையுடன் இந்தச் சட்டவரைவை நிறைவேற்ற முடியும் எனவும் நீதிமன்றம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதையடுத்து, முன்னாள் ஜனாதிபதிகளுக்குரிய உரித்துரிமைகளை நீக்கும் சட்டவரைவு மீது இன்று காலை நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்று, இன்று மாலை அந்தச் சட்டவரைவு நிறைவேற்றப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்தே, முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் இன்றுடன் நீக்கப்படுவதற்குச் சாத்தியங்கள் ஏற்பட்டுள்ளன. இந்தச் சிறப்புரிமை நீக்கச் சட்டவரைவு நிறைவேற்றப்படும் பட்சத்தில், முன்னாள் ஜனாதிபதிகளின் ஊதியங்கள் குறைக்கப்படும், பாதுகாப்புக் குறைக்கப்படும், அத்துடன் மிகப்பெரும் மாளிகைகளுக்கான உரிமைகளும் இல்லாமல் செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-44)

## ஈ.பி.டி.பி.யின்...

நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

1990ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இறுதியில் மண்டைதீவுப் பகுதி இராணுவ முற்றுகைக்குள் இருந்தே வேளை, அங்குள்ள மக்களுக்கு நாங்கள் நிவாரணப் பொருள்கள் கொண்டு சென்றோம். அப்போது, 15 தொடக்கம் 20 வரையானவர்களை இராணுவத்தினர் பிடித்து வைத்திருந்தனர். அவர்களில் 13 வயதுச் சிறுவன் ஒருவனும் இருந்தான். நாங்கள் அவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பிய சில நிமிடங்களில் பெரும் சத்தங்கள் கேட்டன. அனைவரும் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதன் பின்னர் நாங்கள் நெடுந்தீவு பிரதேசத்தைக் கைப்பற்றினோம்.

அவ்வேளையில் அங்கிருந்த அரச உத்தியோகத்தரான நிக்லஸ் என்பவரை சந்திக்க வருமாறு டக்ளஸ் கூறியிருந்தார். அதற்கு அந்த அரச அதிகாரி மறுத்ததைத் தொடர்ந்து அவரைச் சித்திரவதை செய்து கொன்றுவிட்டு, சடலத்தை தூக்கில் தொங்கவிட்டனர்.

டக்ளஸ் தேவானந்தாவின் மெய்ப் பாதுகாவலராக இருந்தவரை புலிகளுடன் தொடர்பு எனக் கொலை செய்தனர். நெல்லியடியைச் சேர்ந்த சட்டத்தரணி மகேஸ்வரியைக் கொலை செய்தனர். தம்முடன் முரண்பட்ட ரமேஷ் என்கிற தினமுரசு பத்திரிகையின் ஆசிரியர் அற்புதனைக் கொலை செய்தனர். அந்தக் கொலைகளைப் புலிகள் செய்ததாகக் கூறினார்கள். ஆனால் புலிகள் அவர்களைக் கொலை செய்யவில்லை. இவர்களே கொலை செய்தனர்.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் பணியாளர் கே.எஸ்.ராஜா என்பவரை இந்தியாவில் இருந்து இலங்கை அழைத்து வந்து தமது ஊடகப் பணிகளுக்காக வைத்திருந்தனர். அவரும் இவர்களுடன் முரண்பட்டபோது, காலிமுகத்திடல் கடற்கரைப் பகுதியில் மதுபானத்துக்குள் சயனைட் கலந்து கொடுத்துப் படுகொலை செய்தனர்.

அத்துடன், மலையகத்தைச் சேர்ந்த மோகன் மற்றும் விஜி எனும் இருவரையும் கொலை செய்தனர். அவர்களை மலசலகூடக் குழிக்குள் போட்டு அசிட் ஊற்றி உடல்களைப் பொசுக்கினார்கள். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சூரி என்பவரைக் கொழும்பில் கொலை செய்து, கடற்கரையில் அவரின் உடலை வீசும்போது அந்தப் பகுதிமக்கள் கண்ணுற்று அது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்தனர். இதன்போது சிலர் கைதுசெய்யப்பட்டனர்.

இவற்றைவிட ஈ.பி.டி.பி.க்குச் சொந்தமான கொழும்பு பார்க் வீதியில் இருந்த வீட்டில் பல கொலைகள் நடைபெற்றன. இந்தப் படுகொலைகளுக்குச் சாட்சியமாக நான் இருக்கின்றேன். விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டால், உயிர் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டாலும்கூட துணிந்து சாட்சி சொல்ல நான் தயார் - என்றார். (அ-ம-26-20)

## புதிய...

ளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நீக்கம் தொடர்பில் தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளோம். அதற்குரிய நடவடிக்கை நிச்சயம் முன்னெடுக்கப்படும். அரசியலமைப்பு மறுசீரமைப்பின்போதே இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும். புதிய அரசாங்கம் பதவிக்குவந்து 10 மாதங்கள்கூட ஆகவில்லை. பொருளாதாரத்தை உறுதிப்படுத்த வேண்டும் என்பதே தற்போதைய நோக்கம். அதை நோக்கி வெற்றிகரமாகச் செயற்பட்டு வருகின்றோம் - என்றார். (அ-ம-44)

## உள்நாட்டுப்...

நாடாளுமன்றத்தில் நேற்று அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரின்போது உள்ளகப் பொறிமுறையே ஏற்கப்படும் என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்திருக்கின்றார். ஆனால் வெளிநாட்டுப் பொறிமுறையே சிறந்தது என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

உள்ளகப் பொறிமுறை மீது தமிழர்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். குற்றம் இழைத்தவர்கள், இனப்படுகொலை செய்தவர்கள் உள்ளகப் பொறிமுறை ஊடாகப் பாதுகாக்கப்படும் சூழ்நிலை காணப்படுகின்றது. எனவேதான் வெளிநாட்டுப் பொறிமுறையின் அடிப்படையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்படும் எனக் கோருகின்றோம்.

வெளிநாட்டுப் பொறிமுறைக்கு அரசாங்கம் அஞ்சுவது ஏன்? குற்றமிழைத்த இராணுவம், புலனாய்வுப் பிரிவினர், அதிகாரிகள், அரசியல் தலைவர்கள் மற்றும் ஒட்டுக்குழுக்களை பாதுகாக்கும் நோக்கில்தான் வெளிநாட்டுப் பொறிமுறையை ஏற்க மறுக்கின்றனர்.

அச்சமில்லையெனில் வெளிநாட்டுப் பொறிமுறைக்கு அரசாங்கம் இணங்க வேண்டும். உள்நாட்டுப் பொறிமுறை ஊடாக நீதி கிடைக்காது என்பதை கடந்தகால அரசுகள் நிரூபித்துள்ளன. எனவே, வெளிநாட்டுப் பொறிமுறையை அரசாங்கம் ஏற்க வேண்டும் - என்றார். (அ-ம-44)

## ஹெரோய்ன்...

ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையமேற்கொண்டசுற்றிவளைப்பின் போதே மேற்படி இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். கைதுசெய்யப்பட்ட இளைஞர்கள் நால்வரும் 18 தொடக்கம் 23 வயதுடையவர்கள். அவர்களிடம் இருந்து 110 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருளும், 30 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளும் மீட்கப்பட்டுள்ளன. சந்தேகநபர்களுக்கு எதிராக மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (அ-ம-26-20)

## கட்டாக்காலி...

மயூரனால் நேற்று வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

நாய்களால் ஏற்படும் விபத்துகள் மற்றும் தொற்று நோய்களைக் கருத்திற்கொண்டு நாய்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் பெண் நாய்களுக்கான கருத்தடைச் செயற்றிட்டத்தினை நல்லூர்ப் பிரதேசசபை முன்னெடுக்கின்றது. இதன்படி, இன்று 10ஆம் திகதி முதல் 14ஆம் திகதி வரை நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட இடங்களில் பெண் நாய்களுக்கான இலவசக் கருத்தடைச் சிகிச்சை முகாம் நடைபெறவுள்ளது. இந்தச் சிகிச்சை முகாமில் கட்டாக்காலி பெண் நாய்களைப் பிடித்து ஒப்படைப்பவர்களுக்கு ஒரு நாய்க்கு 600 ரூபா வீதம் சன்மானம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நல்லூர்ப் பிரதேச சபையின் பெண் நாய்களுக்கான இலவசக்கருத்தடைச்சிகிச்சை முகாம் இன்று புதன்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை திருநெல்வேலி கம்பன் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1.30 முதல் மாலை 4.15 வரை திருநெல்வேலி பாரதி சனசமூக நிலையத்திலும் நடைபெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை திருநெல்வேலி மேற்கு கலைச்சுடர் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை கொக்குவில் பழைய உப அலுவலகத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை நல்லூர் வடக்கு கலைமகள் சனசமூக நிலையத்திலும், பிற்பகல் 1.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை கல்வியங்காடு பொதுநோக்கு மண்டபத்திலும் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை அரியாலை கிழக்கு உதயஒளி சனசமூக நிலையத்திலும் நாய்களுக்கான கருத்தடை சிகிச்சை முகாம் முன்னெடுக்கப்படவுள்ளது - என்றார். (அ-ம-26-20-66)

## மனித...

எமக்கு முக்கியம். எனினும், சில நாடுகள் எல்லா விடயங்களையும் அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தி ஏனைய நாடுகளுக்கு அழுத்தம் வழங்குவதற்கு முயல்கின்றன. இதை அனுமதிக்க முடியாது.

இலங்கையின் இறையாண்மைக்காக 43 நாடுகள் முன்னிலையாகின. இலங்கைக்கு ஆதரவாக கருத்துகளை வெளியிட்டுள்ளன. அந்த நாடுகளுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். ஏனைய நாடுகளும் இலங்கை தொடர்பில் உண்மையான கருத்துகளை அடிப்படையாகக்கொண்டு முடிவுகளை எடுக்க வேண்டும். மாறாக அரசியல் நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் செயற்படக்கூடாது. 73 வருடங்களுக்கு பிறகு இனவாதமற்ற அரசாங்கம் இலங்கையில் உதயமாகியுள்ளது. எனினும், சில கட்சிகள் இனவாதத்தை பரப்புவதற்கு முற்படுகின்றன. இப்படியான சூழ்நிலையிலும் இனவாதமற்ற ஆட்சியை முன்னெடுப்பதற்கே நாம் முற்படுகின்றோம் - என்றார். (அ-ம-44)

## உள்ளகப்...


சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

ஜெனிவா கூட்டத்தொடருக்கு முன்னதாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு வருகை தந்திருந்தார். இலங்கையின் நல்லிணக்க முயற்சி தொடர்பில் அவர் உட்பட சர்வதேச சமூகம் நம்பிக்கை வைத்துள்ளது என்பது தெளிவாகின்றது. இதுதான் எமக்கும் தேவைப்படுகின்றது.

நாம் ஆட்சிக்கு வந்து குறுகிய காலப்பகுதியில் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும், நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்காகவும், ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். இதனை சர்வதேச சமூகம் வரவேற்றுள்ளது.

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நல்லிணக்கம் மற்றும் தேசிய சமத்துவம் தொடர்பில் சிறந்ததொரு பயணத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. அனைத்து இன மக்களும் தற்போதைய அரசாங்கத்துக்கு ஆணை வழங்கியுள்ளனர். எனவே, உள்ளகப் பொறிமுறை ஊடாக பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும் என உறுதியாக நம்புகின்றோம். இலங்கையில் தேசிய சமத்துவம், நல்லிணக்கத்துக்காக சர்வதேசம் செலுத்தும் அவதானத்தை நாம் மதிக்கின்றோம். இதற்காக அவர்களுக்கு உள்ள உரிமையையும் மதிக்கின்றோம். பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படும். நிகழ்நிலைக் காப்புச் சட்டம் மறுசீரமைக்கப்படும். இதற்காக மூன்று அமைச்சுகள் இணைந்து செயற்படுகின்றன. இலங்கைக்காகப் பல நாடுகள் நம்பிக்கை தரும் வகையில் கருத்துகளை வெளியிட்டுள்ளன. இதுதான் வெற்றி - என்றார். (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானம்

# Sri Ganavajeravar Devasthanam

**மாதடை (மருதபுரம்) கப்பம்புலம்**
**காரைநகர் மேற்கு, காரைநகர்.**

11.09.2025 வியாழக்கிழமை காலை 09.00 மணிதொடக்கம் 10.00 மணி வரையுள்ள அமிர்த சித்தம் (சதுர்த்தி) அச்சுவினி நட்சத்திரம் நாளில் ஸ்ரீ ஞான வைரவர் பெருமானுக்கு பாலஸ்தாபனம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அடியவர்கள் அனைவரும் வருகை தந்து ஸ்ரீ ஞான வைரவப் பெருமானின் திருவருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வீர்களாக. அடியார்கள் தங்களால் இயன்ற நிதி உதவிகளை தந்துதவுமாறு எம் பெருமானின் அடியவர்களை வேண்டி நிற்கின்றோம்.

**அதனைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும்.**

**தொடர்புகளுக்கு: கைபேசி எண் :**

**077 728 3811**

| | |
|---|---|
| மக்கள் வங்கி | சி.பரமநாதன் |
| ஸ்ரான்லி வீதி | செலான் வங்கி |
| கணக்கு இல: | கணக்கு இல: |
| 030200202018506 | 085035402716001 |
| யாழ்ப்பாணம் | யாழ்ப்பாணம் |

# இலங்கையிலிருந்து கறுவா வேண்டாம்

## சேலத்தில் தெரிவிப்பு

இந்தியா,செப்.10

இலங்கை அரசு தமிழக மீனவர்களின் படகுகளைச் சேதப்படுத்தி துன்புறுத்தி னால் இலங்கையில் இருந்துவரும் கறுவா உள்ளிட்ட எவ்வித பொருள்க ளையும் வாங்கமாட்டோம் என இந்தியா வின் சேலம் வர்த்தக நலச் சங்க கூட்டத் தில் தீர்மானம் நிறைவேற்றப்பட் டது. இலங்கை அரசு தமிழக மீனவர்களின் 30 படகுகளை அடித்து உடைத்து சேதப் படுத்தியுள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் தொடரும் பட் சத்தில், இலங் கையிலிருந்து கறுவா உள்ளிட்ட பொருள்களை வாங்கமாட்டோம் என்றும் தெரிவிக் கப்பட்டுள்ளது.

(ச-இ)

**தொலைக்காட்சி நிறுவனத்திற்கு**
**வேலையாள் தேவை**

**We're Hiring - Video Editor !**
- Must Speak Tamil & English
- Skilled in AI tools for Windows Computer
- Experience in Video editing
- Work - from - home opportunity
- Creative projects, flexible hours

-Apply now - Send your details to
Ragee :- senthamarai@gmail.com or senthamarai222@gmail.com

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அன்னை மடியில் 11 . 03 . 1974

அம்பிகை திருவடியில் 12 . 08 . 2025

**கடந்த 12.08.2025 அன்று சிவபதமடைந்த**
**எமது குடும்பத்தலைவி**

## செல்வகுலசிங்கம் பேரின்பநாயகி (இன்பம்)

மாதம் ஒன்று கடந்ததம்மா
நீமறைந்த நாளிருந்து
ஒன்றல்ல மாதம் ஓராயிரம் கடந்தாலும்
மாறுமோ, ஆறுமோ எம் நெஞ்சம்
பார்க்குமிடமெல்லாம் பாவை
உன் தோற்றங்கள்
காற்றிலெல்லாம் உன் வாசனை
காதிலெல்லாம் உன் தேன்குரலே
ஐ பத்து வருடங்கள் வந்து களித்திருந்தாய்
இம் மேதினியில் ஆண்டொன்று கழிய
தாவி வந்த காலனவன் கருவறுத்தே
உன்னை கந்தகமாக்கினான்
ஆறவும் தேறவும் வழியின்றி
அழுது புலம்புகின்றோம். போய் வா !!!
உன் உடல் விடுத்து, உயிர் விடுத்து
இப் பிரபஞ்சமாகி என்றும்
எம் அருகில் வாழ்ந்திருப்பாய்....

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும், வீட்டுக்கிருத்திய நிகழ்வும் நாளை **(11.09.2025) வியாழக்கிழமை** அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 10.30 மணியளவில் நடைபெறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

**விழுபழை,**
**எழுதுமட்டுவாழ்.**

**குடும்பத்தினர்**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 10.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org